# தென்மொழி




தூயதமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 31
ஓலை - 4

விலை
உரு. 5-00

தி.பி. 2030 மேழம்
(ஏப்பிரல் - 1999)

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# மானத்தை இழப்பேனோ?

ஐம்பதி னாயிரம் ஆண்டுமுன் பிறந்த
அருந்தமிழ் வளர்க்காமல்
மொய்ம்பிலதான வடமொழி பேசி—என்
வாழ்வைக் குலைப்பேனோ?

மெய்யின் முற்பிறந்த மேந்தமிழ்ப் பாடி
மேம்பட்டு வாழாமல்
பொய்யின் பிற்பிறந்த வடமொழி பேசி—என்
பூண்டை அறுப்பேனோ?

செந்தமிழ்ப் பாடி உயிர்நலந் தேடி—என்
சித்தத்தை உயர்த்தாமல்
வந்தவர் மொழியாம் வடமொழி பேசி—என்
வாழ்வைச் சிதைப்பேனோ?

வள்ளுவன் குறளை, தொகையினைப் பாட்டை
வாய்மகிழ்ந் துரைக்காமல்
எள்ளுறும் மனுவை வேதத்தைப் பாடி—என்
இனத்தைப் புதைப்பேனோ?

சிலம்புமே கலையினைச் சிந்தா மணியினைச்
சீருறப் பாடாமல்
புலம்புபா ரதத்தினை இராமா யணத்தினைப்
போற்றிநான் அழிவேனோ?

வடவரின் மொழியை இந்தியென் பேயை
வழிவழி தவிர்க்காமல்,
முடவனைப் போலொரு குருடனைப் போல்மனம்
முரண்படக் கிடப்பேனோ?

அற்றைநாள் பிறந்த அருந்தமிழ்த் தாயை
அரியணை யேற்றாமல்
மற்றையர் ஆட்சி மதித்துளம் வெம்பி
மானத்தை இழப்பேனோ?

தந்தன தான தனதன தான
தந்தன தனனான
தந்தன தனன தன தன தான
தன்னா தன தான!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்
- 1975

படிப்பகம்

www.padippakam.com



# தென்மொழி

மொழி — இனம் — நாடு

நிறுவனம் : தி.பி. 1990(கி.பி. 1959)

நிறுவனர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும்வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும்வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப்பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகவே முடியாது. மதப்பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாத வரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையி னின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாத வரை, தமிழ்மொழி தூய்மை யுறாது. தமிழினம் தலை தூக்காது; தமிழ் நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப் பூசல்களி னின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டே யாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

'தென்மொழி'
செந்தமிழ் அடுக்ககம், (சி.கே. பிளாட்சு)
மேடவாக்கம் கூட்டுச்சாலை – 601 302.

## உள்ளே......

* நிலைமை கனிந்திருக்கிறது கலைஞர்க்கு ஓர் அரிய வாய்ப்பு!
* சமற்கிருத ஆண்டு...
* 'உலகப் பெருந்தமிழன்' பாவலரேறு!
* கருவறையினுள்ளும் நம் திருவிளையாடல்கள்!
* சுவையான 'குளம்பி'!
* தமிழ்த் தேசிய இன அடையாளச் சிக்கல்கள்!
* பெயர் இழந்த தமிழ் மக்கள்!
* ஓவாவுரை
* யார் — எவர்?
* சான்றாளன்

## தென்மொழி வெளியீடுகள் கிடைக்கும் இடங்கள்

நம் அரும்பெறல் ஐயா பாவலரேறு அவர்களின் நூல்கள் தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகத்தில் மட்டுமல்லாமல் கீழ்க்காணும் இடங்களிலும் விற்பனைக்குக் கிடைக்கும்.

● 'இறையகம்' 31, அப்பர்சாமி கோயில் தெரு, மயிலார்ப்பூர், சென்னை-4. ☎4996629. ● 'தமிழ்நிலம்' கணிப்பொறி இணையம், அறை எண்:2, 2-ஆம் தளம், 33, வெங்கட்டநாராயண சாலை, நந்தனம், சென்னை-35. ☎ 4330283 ● நூழில் பதிப்பகம், 183, வெங்கட்டரங்கம் தெரு, சென்னை-5. ● கீழைக் காற்று பதிப்பகம், 10,அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை-2. ● விசயா பதிப்பகம், 20, அரச வீதி, கோவை-1. ● அய்யனார் பொத்தக நிலையம், 4, தட்டிவி(டட்லி) மேனிலைப் பள்ளிக் கட்டட வளாகம், திண்டுக்கல்-1. ● முற்போக்கு நூல்கள் விற்பனையகம், அ. செ. மாதவன் 3/139-சி, 3-ஆம் தெரு, இந்திரா நகர், தொழிற்பேட்டை, இராணிப்பேட்டை-632 403. ● குழந்தை ஈகவரசன் 'தென்மொழி இல்லம்' எல்.ஐ.இச்சி. ஐ/657 அண்ணாநகர், திருச்சி-26

படிப்பகம்

www.padippakam.com



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

சுவடி.31) தி.பி. உ0ங0 - மேழம் (ஏப்பிரல்-'99) ஓலை. 4

# நிலைமை கனிந்திருக்கிறது கலைஞர்க்கு ஓர் அரிய வாய்ப்பு!

நற்றமிழ் நெஞ்சங்களின் நீண்ட காலக் கோரிக்கையான தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தியும், தமிழ்வழிப் பயின்றார்க்கு அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை கோரியும் பல்வேறு தமிழ்நல — பொதுநல அமைப்புகளும் இயக்கங்களும் ஒருங்கிணைந்து தமிழ்ச் சான்றோர் பேரவையின் சார்பில், அதன் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் தலைமையில் தமிழுணர்வாளர்கள் நூறுபேர் கால வரையறையின்றி மேற்கொள்ளவிருக்கும் பட்டினிப் போராட்டத்துக்கான நாள் (மேழம் 12) நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

அரசியல் கட்சிகளின் சார்பின்றி நடைபெறும் இப் போராட்டத்தை முன்வைத்துத் தமிழகமெங்கும் — நகரங்கள் பேரூர்களிலெல்லாம் ஒருநாள் (மீனம் 9) அடையாள உண்ணா நோன்பு நடைபெற்றதோடு அதன் முன்னும் பின்னும் துண்டறிக்கைகள் வெளியீடு, கலந்துரையாடல்கள், பொதுக் கூட்டங்கள், மிதிவண்டிப் பேரணிகள், மூடுந்து (Van) செல்கைகள் எனப் பல்வேறு வடிவிலான பரப்புரைகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

போராட்ட வீரர்கள் நூற்றுவரின் பட்டியலும் வெளியிடப் பட்டுவிட்டது!

இந்நிலையிலும் அரசு இப் போராட்டங் குறித்து — போராட்டக் கோரிக்கைகள் குறித்து எவ்வகை நடவடிக்கையும் மேற்கொள்ளாதது மட்டுமன்றிக் கருத்தேதும் வெளிப்படுத்தாமலும் மிகவும் எச்சரிக்கையாக அமைதி பூண்டுள்ளது!

ஏறத்தாழக் கடந்த ஐந்து மாதங்கட்கு முன்னர் இப் போராட்டம் பற்றி அறிவிக்கப்பட்டவுடன், முதலமைச்சரைத்

படிப்பகம்

www.padippakam.com



தலைவராகக் கொண்ட, அரசு அமைப்பான தமிழ் வளர்ச்சி மன்றம் தமிழ் ஆட்சிமொழி — பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் தலைமையில் சடுதியிற் கூடித் தமிழ்வழிக் கல்வித் தொடர்பாகச் செய்த பரிந்துரையை ஏற்று அரசு ஓர் அறிவிப்பை வெளியிட்டது. அது சில திருத்தங்களுடன் அரசு ஆணையாகவும் வந்தது; அண்மையில் வெளியிடப்பட்ட இவ் வாண்டுக்கான வரவு செலவுத் திட்டம், கல்வி மானியக் கோரிக்கை ஆகியவற்றிலும் இடம் பெற்றுள்ளது.

இவற்றாலெல்லாம் தமிழ் இரண்டாம் நிலையில் ஒரு மொழிப் பாடமாகவும் அறிவியல், கணக்கு, குமுக அறிவியல் ஆகியவற்றில் இரண்டிற்குப் பயிற்றுமொழியாகவும் மழலையர் பள்ளி முதல் இடம் பெறும் என்று சொல்லப்பட்டாலும், அடிப்படையில் ஆங்கிலம் முதன்மையான மொழிப் பாடமாகத் தொடர்ந்து நீடிக்கும் என்பது உறுதிசெய்யப்பட்டிருப்பதுடன், அது மேற்கூறிய முப்பாடங்களுள் ஒன்றன் பயிற்றுமொழியாக நீடிக்கவும் வழிவகுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்வழிக் கல்விக்கு முறையான செயற்பாடு என்பது, வகுப்புக ளின் அடிப்படையிலான படிநிலையாக இருக்கவேண்டுமே தவிரப் பாடங்களை நோக்கியதாக இருப்பது பொருளற்றது. மூன்றில் இரண்டு, ஒன்று என்பனவெல்லாம் தமிழ்த் தொடர்பான ஏனைய முயற்சிகளைப் போல இதுவும் சின்னாளில் செயலிழந்து போகும் வகையில் அரசு அல்வழியில் ஊக்கப்பட்டிருக்கிறது போலும் என்ற ஐயுறவுக்கே இடஞ் செய்கின்றன.

ஒன்றைத் தெளிவாகக் கொள்ளல் வேண்டும்: தமிழுக்கு இடையில் அயல்மொழியின் — ஆங்கிலத்தின் பயிற்சியும் பயன்பாடும் வரையறுக்கப்பட வேண்டுமே தவிர, அயல்மொழிக்கு இடையில் தமிழின் நிலை வரையறுக்கப்படக் கூடாது.

இனி, ‘மொழிச் சிறுபான்மையினர் பள்ளிகள்தவிர’, — ‘தொடக்கப் பள்ளிகள் — எட்டாம் வகுப்பு வரை’ என்பன வெல்லாம் அரசினால் தெளிவுபடுத்தப்படாமலே உள்ளன.

எட்டாம் வகுப்புக்கு மேல் என்ன நிலை என்பதும், நடுவணரசுப் பாடத் திட்டப் பள்ளிகள், தகுதிநிலைப்(Matriculation) பள்ளிகள் நிலை என்ன என்பதும் தெளிவுபடுத்தப்படவில்லை. இப் பள்ளிகளையெல்லாம் இத்திட்டம் கட்டுப்படுத்தாது என்றால் இது முன்னைய நிலையினும் மும்மடங்கு கேடானதே!

பொறியியல் முதலான உயர்கல்வித் துறைகள் பற்றியோ

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்வழிப் பயின்றார்க்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்பது பற்றியோ எவ்வகைக் குறிப்பும் அரசினால் வெளிப்படுத்தப்படவில்லை.

**பட்டினிப் போராட்டத்தின் மூன்று கோரிக்கைகள்**

* தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கல்விக் கூடங்களிலும் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்றுமொழியாகவும் பாடமொழியாகவும் இருக்க வேண்டும். ஆறாம் வகுப்பு முதல் ஆங்கிலம் ஒரு பாட மொழியாக மட்டுமே கற்பிக்கப்படலாம்.
* பொறியியல், மருத்துவம், சட்டம், தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட உயர் கல்வித் துறைகள் அனைத்திலும், முன்னரே தமிழ்வழிப் பாட நூல்கள் அணியமாகவும் அறிமுக நிலையிலும் இருத்தலால் வரும் கல்வியாண்டிலேயே அவ்வுயர் கல்வித் துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக் கல்வியை நடைமுறைக்குக் கொணர வேண்டும்.
* தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக் கல்வி பயின்றவர்க்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை தரவேண்டும்.

வேலைவாய்ப்பொடு தொடர்புபடுத்தாத வரையில் எவ்வகைக் கல்வித் திட்டமும் வெற்றிபெறாது என்பது உறுதி.

ஆகவே, கோரிக்கைகளை வலியுறுத்தித் தமிழ்ச்சான்றோர் பேரவையின் ஒருங்கிணைப்பிலான காலவரையற்ற பட்டினிப் போராட்டத்தை நடத்துவது தவிர்க்கமுடியாததாகவும் கட்டாயமாகவும் உள்ளது!

இப் போராட்டம், அனைத்து நிலையிலும் தமிழ் ஆளுமை பெறும் வகையில் அதனை அரியணையேற்றுவதற்கு அடிப்படையான போராட்டமே தவிர, எந்த ஒரு கட்சியையும் அரியணையிலிருந்து அகற்றவோ, வேறு எந்தக் கட்சியை யாவது அரியணையில் அமர்த்தவோ நடத்தப்படும் போராட்டமுமன்று. இப் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் யாரும் ஆட்சியைக் கைப்பற்றிக் கோலோச்சும் கட்சி அரசியல் முனைப்புடையவர்களும் அல்லர்.

இவ்விடத்தில் ஒன்றை நாம் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

1970 வாக்கில் தி.மு.கழக அரசு, தமிழைப் பயிற்றுமொழியாகச் செயற்படுத்த முனைந்தபோது சிற்சிலர், அரசியல் காழ்ப்புணர்ச்சியாலும் இனப் பகைமையாலும் மாணவர்களுக்கிடையில் தமிழுக்கு எதிரான சலசலப்பை ஏற்படுத்தியது உண்மையே. ஆனால் அப்போதுங்கூட அரசு முறையாகத் திட்டமிட்டுச் செயற்படுத்தத் தவறிய தென்றே கருத வேண்டியுள்ளது. அது நிற்க!

இன்றைய நிலை அத்தகையதன்று. பாவலரேறு ஐயா அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர் அவர்கள்,

படிப்பகம்

www.padippakam.com



வேறு காரணங்களுக்காக இருமுறை ஆட்சியை இழந்ததுபற்றிக் குறிப்பிட்டு,

"அன்றைக்கே தமிழ் ஆட்சிமொழிக்காக ஒருமுறை ஆட்சியை இழந்திருக்கலாம். அப்படி இழக்காதது என்னுடைய தவறாகக்கூட இருக்கலாம்"

—என்று மனந்திறந்து பேசி னார். அவ்வாறு பெரியதோர் ஈகம்(தியாகம்) செய்யவேண்டிய நெருக்கடியோ பேரிழப்பு எதனையும் தாங்க வேண்டிய சூழலோ இன்று இல்லை.

மேற்கூறிய நிகழ்ச்சியிலேயே,

"அன்றைக்கு இருந்த நிலை இன்று மாறியிருக்கிறது. பாவலரேறு போன்றவர்கள் வழங்கிய உழைபபால், பட்ட பாட்டால் தமிழகத்திலே நிலைமை கனிந்திருக்கிறது என்று நான் சொல்வேன்"

— என்று தாம் குறிப்பிட்டதைக் கலைஞர் அவர்கள் மறந்திருக்க முடியாது. அது வெற்றுரை என்று நாம் கருதவில்லை. இன்று தமிழுக்கு என்று எதையுஞ் செய்யாவிட்டால் தான் அரசோ, ஆளுங்கட்சியோ இன்னல் இழப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்!

தமிழுக்குச் சார்பாகச் செயல்பட்டால், அது தி.மு.க. வுக்கு ஆக்கமாக அமைந்து விடும் என்று கருதித் தமிழைப் புறக்கணித்து வந்த நிலையில் பேராயக் கட்சி இன்றில்லை. தமிழ்

## கொம்புசீவி விடப்பட்ட காங்கேயங் காளை!

ஈராண்டுக்கு முன் சட்டமன்றத் தில் அமைச்சர் ஒருவர் ஆங்கிலத்தில் பேசியபோது முதலமைச்சரே எழுந்து அவரைத் தமிழில் பேசும்படி கூறினார்.

ஆனால், ஆங்கிலத்தின் வல்லாண்மையை எதிர்த்தும் தமிழ்வழிக் கல்வியும் அவ்வழிப் பயின்றார்க்கு வேலைவாய்ப்புங் கோரித் தமிழுணர் வாளர்கள் தமிழ் நாடெங்கும் அறவழிப் போராட்டங்களில் மும்முரமாக ஈடுபட்டு வரும் இற்றை நாளில் — 22.3.'99 அன்று ஆளுங் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் இராசுக்குமார் (மன்றாடியார்) என்பவர் சட்டப் பேரவையில் எழுந்து ஆங்கிலத்தில் பேசுகிறார். எதிர்க்கட்சி (த.மா.கா.) உறுப்பினர் திரு. இராமன் ஒழுங்குச் சிக்கல் எழுப்ப முயன்றும், அமைச்சர் தமிழ்க்குடிமகன் 'உங்களுக்குத் தமிழ் தெரியுமா?' என வினாவெழுப்பியும் அவர் அவற்றைப் பொருட்படுத்தாமல் மடமடவென ஆங்கிலத்திலேயே பீற்றி விட்டு முதலமைச்சரைக் குளிர்ச்சிப் படுத்தும் வகையில் குறட்பா ஒன்றை யுங் கூறி, நகையாட்டாக 'நன்றி, வணக்கம்' என்றுரைத்து முடித்திருக் கிறார். மூக்கோ நாக்கோ சேதப்படாமல் வெளிவந்துலவுகிறார்.

இது இயல்பாக நடந்திருக்க முடியாது. காங்கேயங் காளை மாட்டுக்குக் கொம்பு சீவிவிட்டவர் யார்?

படிப்பகம்

www.padippakam.com



மாநிலப் பேராயத் தலைவர் திரு. கருப்பையா(மூப்ப)னார் கூடத் “தமிழைப் பாதுகாப்பதில் எங்களுக்கும் ஆர்வம் உள்ளது. தமிழ்வழிக் கல்வி உள்ளிட்ட சிக்கல்களைக் கட்சியின் அரசியல் நடவடிக்கைக் குழு ஆராய்ந்து ஆவன செய்யும்'' என்று கூறுகிறார். அக் கட்சியைச் சேர்ந்த மேனாள் நடுவணரசு அமைச்சர் திரு. ப. சிதம்பரமோ, தமிழைச் செம்மொழிப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று குரல் கொடுக்கிறார். சட்ட மன்ற எதிர்க் கட்சித் தலைவர் 'திரு. பால கிருட்டிணனும், இந்திரா பேராயத் தலைவர்களுள் ஒருவரான திரு. குமரிஅனந்தனுங்கூடத் தாம் இப் பட்டினிப் போரில் பங்கேற்க அணியமாய் இருப்பதாக விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அன்றியும் இன்று பேராயத்தார் பலரும் கூறும் காமராசர் ஆட்சி என்பது, இன்று பட்டினிப் போராட்டத்துக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளைச் செயற்படுத்திவந்த ஆட்சியே என்பது குறிப்பிடத்தக்கது.

மொழியைத் தீண்டத்தகாதவற்றின் பட்டியலில் வைத்திருந்து, மக்களிடையே பச்சை பிடிக்காமல் பழுப்புத் தட்டிப்போன

### மாநிலப் பட்டியலுக்கே கல்வித்துறை மீளுமா?

இன்று கல்வித் துறை மாநில அரசின் முழுமையான கட்டுப்பாட்டில் இல்லை; நெருக்கடி நிலைக் காலத்தில், அது நடுவணரசின், ஆளுமை மேலோங்கிய பொதுப்பட்டியலுக்குக் கைப்பற்றிக் கொள்ளப்பட்டுவிட்டது. நெருக்கடிநிலை நீங்கிய பின் பண்டுபோல் கல்வியும் மாநிலப் பட்டியலுக்கு மீட்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அப்போது அதில் யாரும் அக்கறை கொள்ளவில்லை.

ஒற்றைக் கட்சியின் ஆட்சி முறை ஒய்ந்தும் இந்தியத் தேசியக் கட்சிகளின் ஆளுமை தேய்ந்தும் மொழிவழித் தேசியக் கட்சிகள்—மாநிலக் கட்சிகள் மதிக்கப்பட்டேயாக வேண்டிய இற்றைச் சூழலில் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மீட்பது எளிது. முன்னர்த் தேசிய முன்னணி ஆட்சி அமைந்த போது தமிழ்நாட்டின் சார்பாக அமைச்சரானவர்கள் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீட்டிப்பதில் காட்டிய விரைவை இது போன்ற உரிமை மீட்பு — ஆக்கப் பணிகளில் காட்டவில்லை.

காமராசர் ஆட்சியை இலக்காகக் கொண்டு இயங்கும் பேராயத்தார், அவர் காலத்தில் இருந்தது போல் கல்வியை மாநிலப் பட்டியலுக்கே மீட்பதில் அக்கறை கொள்வார்களா?

பாரதீய சனதா அரசுக்குத் தோள் கொடுத்து நிற்கும் பா.ம.க.வும் ம.தி.மு.க.வும் மிக எளிதில் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மீட்டு வெற்றி யீட்டலாம். ஏன், பாரதீய சனதாவேகூடக் கல்வியை நடுவணரசின் பிடியிலிருந்து விடுவித்து வரலாறு படைக்கலாமே!

படிப்பகம்

www.padippakam.com



பொதுவுடைமைக் கட்சிகளுங்கூட, மொழித் தொடர்பான தம் நிலை குறித்து மறு ஆய்வு செய்து தம் போக்கை மாற்றிக் கொண்டுள்ளன. அவை தமிழுக்கு ஆக்கமாகச் செயல்படுகின்றனவோ இல்லையோ இனி எதிராகச் செயற்படத் தயங்குவது உறுதி!

பாட்டாளி மக்கள் கட்சியும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் அரசியலைப் பொறுத்து வெவ்வேறு நிலைப் பாடுகள் கொண்டிருப்பினும் தமிழுக்கு எதிராக இயங்குவன அல்ல. பா.ம.க. தமிழை இந்திய ஆட்சிமொழி யாக்கக் கோரித் தில்லியில் மாநாடு நடத்தியது நினைவுகூரத்தக்கது. ம.தி.மு.க.வோ, இப் பட்டினிப் போராட்டத்துக்குச் சார்பாக அறிக்கை வெளியிட்டிருக் கிறது! அ.இ.அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை திரு. செயலலிதா ஒரு பக்கம் ஆங்கிலத்தில் பிளந்து தள்ளிக் கொண்டிருந்தாலும் மறுபக்கம் வழக்குமன்ற உசாவல் நடவடிக்கைகளை எதிர்கொள்ளாது காலங் கடத்துவதற்குத் தமிழை நாடுகிறார் — குற்றச்சாட்டுகள் முதலான வற்றைத் தமிழில் தரவேண்டுகிறார். அ.தி.மு.க. தமிழுக்கு எதிராக இயங்கினால் அது தற்கொலைக்குச் சமம்!

இவ்வளவு ஏன்? பாரதீய சனதாக் கட்சியின் இளைஞரணி மாநாட்டிற்கூட இப் போராட்டக் கோரிக்கையை வலியுறுத்தித் தீர்மானம் போட்டுள்ளனர். "எட்டாம் வகுப்புக்கு மேல் ஆங்கிலம் அல்லாத வேறொரு மொழியும் (?) கற்பிக்க ஏற்பாடு தேவை என்று அத் தீர்மானத்தில் ஒரு பொடி வைக்கப்பட்டிருந்தாலும் அது வேறு வகையில் எதிர்கொள்ளப்பட வேண்டியதாகும்.

பாரதீய சனதா முதலான சில கட்சிகளுக்குத் தமிழ்பற்றியோ தமிழ்மக்களின் முன்னேற்றங் குறித்தோ அக்கறையேதும் இல்லையென்றும், மக்கட் சாய்காலைப் பெருக்கிக் கொள்ளவே தமிழ்வழிக் கல்வியை வரவேற்றுள்ளன என்றும் சிலர் கூறுவது உண்மையானால், தமிழ்த் தொடர்பான கோரிக்கைகளை ஆளுங் கட்சி நிறைவேற்றாவிட்டால் — பிற கட்சிகள் வரவேற்றுச் செயல் படாவிட்டால் அவை மக்களால் புறக்கணிக்கப்படும் என்பதும் அவ்வுண்மையின் மறுபக்கத்தில் வெளிப்படுதல் குறிப்பிடத்தக்கது!

இனி, கடந்த மூவாண்டுகளில் மிக முனைப்பாகத் தொடங்கப் பட்ட தமிழ்த் தொடர்பான முயற்சிகள் பலவும் சென்று தேய்ந்து இறுதலாகச் செயலிழந்துவிட்டன — திட்டமிட்டு முடக்கப்பட்டு விட்டன.

தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற முனைவர் தமிழ்க்குடிமகன், 'தமிழ்நாட்டின் தமிழ்த்

படிப்பகம்

www.padippakam.com



தெருவில் தமிழ்தான் இல்லை' எனும் நீண்டகால ஏக்கத்தைத் தீர்த்து வைக்கும் வகையில் தமிழ்நாட்டில் எங்கணும் பெயர்ப் பலகைகள், விளம்பரப் பலகைகள் முதலானவை தமிழிலேயே எழுதப்பட வேண்டும்; அவற்றில் பிறமொழி இடம்பெறவேண்டுமேல், மேலே தமிழில் எழுதிவிட்டு, அதனினும் சிறிய அளவில் அப் பிறமொழி வரி இருக்கலாம் என்னும் அரசாணையைச் செயற்படுத்த ஆவன செய்தார். மனத்திரிபு கொண்ட இனப் பகைவர்களும் நகை வேழம்பர்கள் சிலரும் கிண்டல் செய்தாலும் தமிழுணர்வாளர்க ளிடையே அரசின் நடவடிக்கை, வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது. பிறமொழிப் பெயர்களுக்கான தமிழ்ப் பெயர்ப் பட்டியல்கள் வெளியிடப்பட்டன. செயற்பாடுகள் தொடங்கின.

தமிழ் ஆட்சிமொழி — பண்பாட்டுத் துறை அமைச்சர் மூன்று மாதங்களில் பெயர்ப் பலகைகள் மாற்றப்பட வேண்டும் என்று கூறியிருக்க, அதில் முதலமைச்சர் தலையிட்டு அதனை ஓராண்டாக நீட்டிப்புச் செய்தமையால் அது பைய மறக்கப்பட்டுவிட்டது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு நடத்தக் கோரி மக்களிடையே எழுச்சி மூண்டது. நாடு தழுவிய அளவில் மக்கள் தொடரி(மனித சங்கிலி)கள், ஆர்ப்பாட்டங்கள், அடையாள உண்ணாநோன்புகள் உள்ளிட்ட அறவழிப் போராட்டங்கள் நடத்தப் பெற்றன. மக்களிடையே ஒப்போலை பெற்றுக் கருத்துக் கணிப்பு நடத்தி நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டு விழுக்காடு தமிழ்வழிபாட்டுக் குச் சார்பான நிலை என்பது மெய்ப்பிக்கப்பட்டது.

இத்தனைக்குப் பின்னும் சமற்கிருத வழிபாடு மாற்றப்பட வில்லை. அதற்கு மாறாகத் தமிழ் வழிபாட்டில் முனைப்புக் காட்டிய அறநிலையத் துறை ஆணையர் திரு. மெய்கண்டதேவனே அத் துறையினின்றும் மாற்றப்பட்டார்; அவ்விடத்தில் திரு. சுகவனேசுரன் அமர்த்தப்பட்டுத் தமிழ்வழிபாடு ஒருவாறு ஓரங்கட்டப்பட்டு விட்டது. அதுதொடர்பாகத் தொடுக்கப்பட்ட வழக்கையும் முறையாக நடத்தி வெற்றிகாண அரசு முனைப்புக் காட்டவில்லை!

அரசு அலுவலகங்களில் ஆள்வினை(நிர்வாகம்) தமிழில் நடைபெற வேண்டும் என்று எடுக்கப்பட்ட முயற்சியும் ஒருவாறு கைகழுவப்பட்டுவிட்டது என்பதுதான் நடைமுறை உண்மை. அதிகாரிகள் — அலுவலர்கள் ஒத்துழைக்கவில்லை; தமிழில் கையொப்பமிடுவதைக்கூடத் தட்டிக் கழிக்கிறார்கள் என்னும் நிலை ஏற்பட்டுவிட்டது. தொடக்கத்தில், தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் இல்லாமைதான் தலையாய தடை என்று கூறப்பட்டது. தமிழ்த் தட்டச்சுப் பொறிகளின் எண்ணிக்கை கூட்டப்பட்டு, அத்தடையும்

படிப்பகம்

www.padippakam.com



அகற்றப்பட்ட பின்னும் அரசு உத்தரவுகள் முதலியன தமிழில் வெளிவரும் நிலை இல்லை. தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத் துறை அமைச்சகத்தினின்றே ஆங்கிலத்தில் கடிதம் அனுப்பப்படுகிறது. (எடுத்துக்காட்டாகத் திருவாளர்கள் முத்துக்கூத்தன், புட்பவனம் குப்புசாமி ஆகியோரைத் தென்னகப் பண்பாட்டுக் களஞ்சிய உறுப்பினராக அமர்த்துவது தொடர்பான கடிதத்தைத் தமிழ் ஆட்சி மொழி — பண்பாட்டுத் துறைச் செயலர் ஆங்கிலத்திலேயே அனுப்பியுள்ளார்.)

**நூற்றுவர்**
**பட்டினிப் போர்**

**காலம் : தி.பி. 2030 மேழம் 12 (25.4.'99) ஞாயிறு காலை 10.30 மணி**

**இடம் : சென்னை - வள்ளுவர் கோட்டம் அருகில்**

**பேரணி**

**அன்று (25.4.'99) காலை 9 மணிஅளவில் - சைதாப்பேட்டை மறைமலையடிகள் பாலத்திலிருந்து பேரணி புறப்படுகிறது!**

பொறியியற் பட்டப் படிப்பைத் தமிழ்வழி நடத்தப் பாட நூல்களும் பயிற்றாசிரி யர்களும் மாணவர் சேர்க்கை யும் அணியமாக இருந்தும் தமிழ்நாட்டரசு கடந்த ஆண்டு அத் திட்டத்தைக் கை நெகிழ விட்டதூஉம் அல்லாமல், கடந்த ஆண்டில் முதலமைச்சர் கூறியபடி இவ்வாண்டில் எவ் வகை முயற்சியும் மேற் கொள்ளப்படாமலே மூடி முடிக்கப்பட்டுவிட்டது.

இவையெல்லாம் 'எங்குந் தமிழ்; எதிலுந் தமிழ்!' என்னுந் தி.மு.கழக அரசின் முழக்கத்தை நகைப்புக்குரியதாக்கிவிட்டன. முதல்வர் கலைஞர் அவர்கள் மீதே தமிழுணர்வாளர்கள் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது!

தமது பதினான்காம் அகவையில் தமிழ்க் கொடியைக் கையிலேந்தியும், 'தமிழ் வாழ்க' என்னும் முழக்கமிட்டும் பொது வாழ்வில் அடியெடுத்து வைத்த முத்தமிழ் அறிஞர் அவர்கள், அப் பொதுவாழ்வுக்கே மணிவிழாக் கொண்டாடும் நிலையிலும் தமிழ்த்தொடர்பான முயற்சிகளில் நம்பிக்கை இழக்கப்படும் நிலை எவ்வாறு ஏற்பட்டது?

நாம் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக மொழிப்போரைப் பல்வேறு கட்டங்களில் கருத்துவகையிலும் செயல்வகையிலுமாகத் தொடர்ந்து நடத்தி வருகிறோம். 1965-இல் நடைபெற்ற போராட்டம் உலக வரலாறு படைத்தது. உலகில் வேறு எங்கும் எப்போதும்

படிப்பகம்

www.padippakam.com



இல்லாத நிலையில், நீண்ட எதிர்காலத்துக்குரிய தமிழ் இளைஞர்கள் தாய்மொழியுணர்வினால் தீப் பாய்ந்து மாண்டனர். வெந்தழலில் உடல் வேகும் போதும் 'ஐயோ! அம்மா!' என்னாது 'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு!' என முழங்கின அவர்தம் வாய்கள்! நூற்றுக்கணக்கானோர் வேட்டெஃக(துப்பாக்கி)க் குண்டுக்கு இரையாகி மடிந்தனர்! கிட்டத்தட்ட ஒருமாதக் காலம் மாணவர் போராட்டத்தால் நாடே நிலைகுலைந்தது; அரசு செயற்பட முடியாது நிலைகுத்தி நின்றது!

அத்தகைய தமிழ்நிலத்தில், அம் மாபெரும் எழுச்சிக்குப் பின் ஆட்சிக்கு வந்த தி.மு.கழகமே, இடையீடுகளுக்குப் பின்னும் இன்றைக்கு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளது. அவ்வாறிருந்தும் தமிழ்த் தொடர்பான எவ்வகை முயற்சியிலும் வெற்றிபெற முடியவில்லை என்றால், அதிகாரிகளும் அமைச்சர்களும், கட்சிப் பொறுப்பாளர்களும் தமிழுக்கு மாறாகச் செயல்படுகிறார்கள் என்றால், மழலையர் பள்ளிகளில்கூடத் தமிழை முழுமையாகச் செயற்படுத்த முடியாமல் கைபிசைந்து நிற்க வேண்டியிருக்கிறது என்றால் இவ் இழிநிலைக்கு யார் காரணம்?

எவ்வகைச் சார்போ காழ்ப்போ இன்றி — நடுநிலையுள்ளத்தோடு ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு, ஆங்கிலக் கவர்ச்சியால், இவற்றுக் கெல்லாம் அறிந்தோ அறியாமலோ வழிவகுக்கப்பட்டது எந்த ஆட்சி காலத்தில் என்பது விளங்காமல் போகாது!

ஆகவே, முதல்வர் கலைஞர் அவர்கள் தம் கடமையையும் பொறுப்பையும் நன்குணர்ந்து, தம்மால் நேர்ந்த நல்லன அல்லாதவற்றுக்குக் கழுவாயாகவேனும் இப்போராட்டக் கோரிக்கைகளை நிறைவேற்றுதல் வேண்டும்!

இதனால், நாம் மேலே கூறியவாறு எவ்வகைப் பேரிழப்புக்கும் ஆளாகும் நிலை இன்று இல்லை என்பது மட்டுமன்று; ஒருகால் வேறு வகையாக ஏதங்கள் சூழ்ந்தாலும் அவற்றை எதிர்கொண்டு தமிழ் அவரைக் காத்துப் புகழுற வாழ்விக்கும்; தூக்கி நிறுத்தும்! பெருமித நடையிடச் செய்யும்!

சட்டப் பேரவையிலும் வலிவான பெரும்பான்மையுடன் வீற்றிருக்கும் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, தமிழுக்கு ஆக்கஞ் செய்ய இதனினும் வாய்ப்பான சூழல் கிட்டுவது அரிதினும் அரிது!

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்! *(திருக்-489)*

— இறை

படிப்பகம்

www.padippakam.com

# ஊனமுற்ற மொழிக்கு ஓர் ஆண்டா?

பலமொழிகள், இனங்கள் உள்ள இந்தியத் துணைக்கண்டத்தை ஒருமொழி வைத்து ஆள எண்ணும் இந்துவிய பா.ச.க. அரசு, இந்த ஆண்டைச் 'சமற்கிருத ஆண்டு' என்று அறிவித்துள்ளது.

ஒவ்வோராண்டும் சமற்கிருதத்துக்காக ஒதுக்கப்படும் தொகை கொஞ்ச நஞ்சமில்லை. இருந்தாலும், இந்த ஆண்டைச் சமற்கிருத ஆண்டாக அறிவித்து ஒதுக்குவதுதான் வியப்பு! இதுவரை தேவமொழி (தேவபாஷை) என்று சொல்லப்பட்ட மொழி இப்போது இந்தியத் தேசியமொழி என்பது போல் கொள்ளப்படுகிறது; அதன் வளர்ச்சிக்குச் செலவழிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில், சிறுவர்கள் சமற்கிருதம் கற்பதற்கென்று ஏற்கெனவே தொடங்கப்பட்ட நடுவங்களுக்கு நல்கை, கற்கும் சிறுவர்களுக்கான உதவித் தொகை, புதிய நடுவங்கள் தொடங்க ஊக்கத்தொகை என்றெல்லாம் நடுவணரசு வாரி வழங்குகிறது.

சமற்கிருதத்தில் கல்விநிறுவனமோ ஆராய்ச்சி நிறுவனமோ இந்தியாவின் எந்த மூலையில், யார் தொடங்கினாலும் இந்த ஆண்டு அவர்களுக்கு மிகுந்த அளவில் தொகை ஒதுக்கீடு செய்ய நடுவணரசு அணியமாக உள்ளது.

ஒருவேளை, சமற்கிருதம் உலகவழக்கு என்னும் ஒரு கால் இல்லாத - இலக்கிய வழக்கு என்னும் ஒற்றைக்கால் மொழி என்பதால் - இஃது ஊனமுற்ற மொழி ஆண்டு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதோ?

சமற்கிருதம் ஊனமுற்ற மொழி என்பதைவிட உயிரே இல்லாத மொழி என்பதுதான் சரியானது. மக்களுக்குப் பயன்படாத ஒருமொழிக்காக மக்கள் வரிப்பணத்தை அளவில்லாமல் செலவிடுவது எந்த வகையில் சரியானது?

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இச்சமற்கிருத ஆண்டு மக்களின் கல்வியறிவு வளர்ச்சிக்காகவோ, அவற்றையொட்டிய பிறவாழ்வியல் பயன்களுக்காகவோ இப்போது பெரிது படுத்தப்படவில்லை; அது இந்துவியத்தின் அடையாளமாக - இந்துவியம் பரப்பும் உத்தியாகவே முன்னெடுக்கப்படுகிறது என்பதுதான் உண்மை!

- மா. பூ.

கடந்த மீனம் 17 அன்று (31.3.99) சென்னைச் சட்டக் கல்லூரி மாணவர்கள் 'சமற்கிருத ஆண்டு' எனும் கொடும்பாவையை எரித்த காட்சி!

படிப்பகம்

www.padippakam.com

மதுரை மாநகரில் எழுச்சிக் கோலம்!
மக்கள் வெள்ளம் அலைமோதியது!

# ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு!

## பாவலரேறு - சாலையார் படத்திறப்பு - 'உலகப் பெருந்தமிழன்' பிற்சிறப்பு விருது!

'தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் ஆதரவு அலை ஓய்ந்துவிட்டது' என்ற பரப்புரைகளைப் பொய்யாக்கி, அது நீறுபூத்த நெருப்பு என்பதை வெளிப்படுத்தும் வகையிலும் அரசின் தடையைத் தகர்த்தும், காவல்துறையின் கடுபிடிகளை மீறியும் மதுரையில் ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு சிறப்புற நடைபெற்றது!

தி.பி. 2030 கும்பம் 23 ஞாயிறு (7.3.'99) அன்று, மதுரை– தமுக்கம் கலையரங்கில், தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில், குழு அமைப்பாளர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டையொட்டி மதுரை மாநகரம் எழுச்சிக் கோலம் பூண்டிருந்தது. காணுமிட மெல்லாம் கொடிகளும் பதாகைகளும் காட்சியளித்தன.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளி மாநிலங்க ளிலிருந்தும் வந்து, மக்கள் வெள்ளம் போல் திரண்டிருந்தனர்.



அன்று (7.3.'99) காலை 9 மணியளவில் மாநாட்டின் தொடக்க மாகத் தேனிசை செல்லப்பா குழுவினரின் இசை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பெருமக்கள் இருவரின் படத்திறப்பு நடைபெற்றது. பாவலரேறு ஐயா அவர்களின் படத்தை அருள்தந்தை சேவியர் அருளரசு அவர்களும், முனைவர் சாலையார் அவர்களின் படத்தைப் பாவலர் இன்குலாபு அவர்களும் திறந்துவைத்து உரை

படிப்பகம்

www.padippakam.com



யாற்றினர். மதுரைத் திருஞானசம்பந்தர் திருமடத்துத் தலைவர் தவத்திரு அருணகிரி அடிகள் தொடக்கவுரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து பழ. நெடுமாறன் தலைமையுரை யாற்றினார்.

மாநாட்டின் சிறப்பு நிகழ்ச்சியாகப் பாவலரேறு ஐயா அவர்களுக்கு 'உலகப் பெருந்தமிழன்' என்னும் பிற்சிறப்பு விருதினை மாநாட்டின் சார்பில், தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவனர் திரு. நா. அருணாசலம் வழங்க — அதனை அம்மா தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் பெற்றுக் கொண்டார். அவ்வாறே தமிழ்வேழம் சாலையார் அவர்களுக்கு வழங்கப்பட்ட 'உலகப் பெருந்தமிழன்' எனும் பிற்சிறப்பு விருதினை முனைவர் தமிழண்ணல் வழங்க — அதனை முனைவர் சாலினியம்மையார் பெற்றுக் கொண்டார். இசைவாணர் தேனிசை செல்லப்பா அவர்களுக்குப் 'பாசறைப் பாணர்' என்னும் விருதினை மேனாள் அமைச்சர் பண்ணுருட்டி இராமச்சந்திரன் வழங்கிச் சிறப்பித்தார்.



இவ் விருது வழங்கு நிகழ்ச்சியின்போது அவையோர் எழுந்து நின்று வாழ்த்தியும் சூளுரைத்தும் முழக்கமிட்டு ஆரவாரித்தனர்!

பிற்பகல் முனைவர் சாலினியம்மையார் தலைமையில் நடைபெற்ற மகளிர் அரங்கில் திரு. தாமரை பெருஞ்சித்திரனார் உரையாற்றினார். அடுத்து மாணவர் அரங்கம் நடைபெற்றது. தொடர்ந்து, அறிஞர் பெருமக்களும் பல்வேறு இயக்கப் பொறுப்பாளர்களும் உரையாற்றினர். 'விடுதலைப் புலிகள் மீதான் தடையை இந்திய அரசு நீக்கவேண்டும்' என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. இரவு 11 மணியளவில் பாசறைப் பாணர் குழுவினரின் இசை நிகழ்ச்சியுடன் மாநாடு நிறைவுற்றது.

திரு. கா. பரந்தாமன் தலைமையான மாநாட்டு வரவேற்புக் குழுவினர் மாநாட்டுப் பணிகள் அனைத்தையும் செம்மையாகச் செய்திருந்தது பாராட்டத்தக்கது.

○

படிப்பகம்

www.padippakam.com

# கருவறையுள் நம் திருவிளையாடல்கள்!

**'தமிழம்' பன்னீர்**

உயிர்க் கடிகாரம் 'டிக் டிக்' என்று ஒலிக்கத் தொடங்கும் முதல் நொடிப்பொழுதில் இருந்து எல்லா உயிர்களும் தொடக்கம் கொள்கின்றன. தாயின் கருப்பையை விட்டு வெளிவந்து சில நொடிப் பொழுதே ஆன குழந்தையின் உடலில் நீர்த் துளிகள் இன்னும் படிந்துள்ளன. முற்றிலும் சோர்வடைந்து இன்ப மகிழ்ச்சியில் மிதந்து கொண்டுள்ள அதன் பெற்றோர்கள் அதைத் தம் கைகளில் எடுக்கின்றனர். அந்தப் புதிய குழந்தை தன் கை கால்களை நீட்டுவதையும், நெளிவதையும், மெல்லுதல் போல் வாயை அசைப்பதையும், சின்னஞ்சிறு கண்களைத் திறப்பதையும் அவர்கள் வியப்பார்வத்தோடு உற்றுப் பார்க்கின்றனர். அந்த மென்மையான தளிர்க் கொடி போன்ற குழந்தையைக் காண்பவர்கள் எவரும் தாம் இப்படித்தான் பிறந்தோம் என்று எண்ணிப் பார்க்கத் தவறுவதில்லை. அந்த நிகழ்ச்சி நம்மைப் புல்லரிக்கச் செய்கிறது.

"அப்படியில்லை, பிறப்பு என்பது நமக்கு மிகச் சிறந்த நேரமாக இருக்கலாம். அது குழந்தையின் வளர்ச்சியில் இயல்பாக நடைபெறும் ஒன்றுதான். நரம்பு சார்ந்த நிகழ்ச்சிகள் அப்பொழுது ஏற்படுவதில்லை'' என்று மர். தி. பியட்டிரோ(DR. DI PIETRO) என்னும் அமெரிக்க மனவியல் மருத்துவர் கூறுகிறார். அவரும் மற்றும் சில ஆராய்ச்சியாளர்களும் மிக நுட்பமான புதிய கருவிகளைக் கொண்டு குழந்தை பிறப்பதற்குச் சில கிழமைகளுக்கு முன்பாகவே அதன் செயற்பாடுகள் தொடங்குவதாகக் கண்டுபிடித்து உள்ளனர். ஒரு முதிர்கரு(FOETUS) தான் உருக்கொண்டபின் முப்பத்திரண்டாம் கிழமையில் — குழந்தையாகத் தன்னை வெளியுலகில் வாழத் தகுதியாக்கிக் கொள்வதற்கு இரண்டு மாதங்களுக்குமுன் — புதியதாகப் பிறக்கும் குழந்தையைப் போலவே நடந்து கொள்கிறது என்று அவர்கள் கூறுகின்றனர்.

அறிவியல் அறிஞர்கள் கருப்பையுள் வளரும் குழந்தையின் அறிவுத்திற நிகழ்ச்சிகளைக் கண்டுபிடித்துள்ளனர். கருப்பையுள் வளரும் முதிகருவுக்கு ஒன்பதாம் கிழமையில் விக்கல் ஏற்படும், அதிக ஒலிக்கு அது எதிர்ச்செயல் செய்யும். ஆறாம் கிழமையிலேயே ஒலியை உணரும். முதிர்கரு, தன் தாய் உண்ணும் உணவைச் சுவைக்கிறது. அது கருப்பையில் உள்ள பாய்மத்தில்(FLUID) இருந்து சுவையை அறிகிறது. நம்மைப் போலவே கருமுளை கனவுடன் கூடிய விரைந்த கண்ணசைவுத்தூக்கம்(RAPID EYE MOVEMENT)

படிப்பகம்

www.padippakam.com



கொள்கிறது. தாயின் பேச்சொலிக்கும் மற்றவர் பேச்சொலிக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அறிந்து அதற்குத் தகுந்தாற்போல் எதிர்க் குறிப்புத் தருகிறது. பிறப்பதற்குமுன் குழந்தை தான் இருப்பதை அறிந்து கொள்கிறது; உணர்கிறது: எதிர்க் குறிப்புத் தருகிறது; தன் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் தன்னை மாற்றிக் கொள்கிறது.

முதிர்கரு சில புறத் தூண்டுதல்களுக்கு எதிர்க் குறிப்புத் தருவதால் அதை, அது தன் வளர்ச்சியை மேம்படுத்த மேற் கொள்ளும் முயற்சியாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அதன் உணர்வு மண்டலக் கிளர்ச்சிகள் எல்லாம் பின்னாளில் அதற்கு ஏற்படப் போகும் இயல்பு மீறிய நிலைகளுக்கு ஏற்றபடி அது தன்னை மாற்றிக்கொள்ள உதவுகின்றன.

முதிர்கருவின் மாந்த நடத்தை மூலப் பண்பு நலன்கள், தாய் கருவுற்ற சில கிழமைகளிலேயே பெருக்கமுறத் தொடங்குகின்றன. தாய் தான் கருவுற்றிருப்பதை அறிந்துகொள்ளும் முன்பே, கருமுளை (EMBRYO)யின் மூளை பெருக்கம் அடையத் தொடங்குகிறது. ஐந்தாம் கிழமையின்போது கருமுளை தசைக் கட்டிகளால் ஆன ஒரு புழுவைப் போல் தோன்றும் உறுப்புகளோடு மலர்ச்சி பெறுகிறது. வளரும் மாந்தனை, நகரவும் எண்ணவும் பேசவும் திட்டம் தீட்டவும் படைப்புத் தொழிலைச் செய்யவும் செய்கிற மூளைப் பகுதி, கரு முளையில் சாம்பலநிற முறுக்கிய மடிப்புகளுடன் அமைகிறது.

ஒன்பதாம் கிழமையில் அது தன் கைகளை அசைக்கிறது; தன்னைச் சூழ்ந்துள்ள பனிக்குடப் பாய்மத்தை (AMNIOTIC FLUID) உள்ளும் புறமும் இழுத்து அது மூச்சுவிடுகிறது; தன் தாடையைத் திறக்கிறது; உடலை விரைப்பாக்குகிறது. முதல் மூன்று கிழமைகள் முடியும்முன் அது கொட்டாவி விடுகிறது; விழுங்குகிறது; உணர்கிறது; முகர்கிறது. ஆறு கிழமைகள் முடியும்பொழுது அதனால் கேட்க முடிகிறது; பிறப்பின்போது பார்க்க முடிகிறது.

## முதிர்கருவின் விழிப்புணர்வு.

அறிவியல் அறிஞர்கள், முதிர்கருவின் அன்றாட இயக்கங்களைக் கண்காணித்தனர். அது தன் நேரத்தில் பெரும்பகுதியை மேற்குறித்த செயல் முறைகளைக் கொண்டு உடற்பயிற்சி செய்யாமல் உறங்கிக் கொண்டு உள்ளதாக அவர்கள் கண்டறிந்தனர். முப்பத்திரண்டாம் கிழமையில் நாளொன்றுக்கு 90–95 விழுக்காட்டு நேரத்தை அரைத் தூக்க நிலையிலேயே அது கழிக்கிறது. சில ஆழ்ந்த உறக்கத்திலும், சில விரைந்த கண்ணசைவு உறக்கத்திலும், சில அதற்கு இடைப்பட்ட நிலை உறக்கத்திலும் கழிக்கின்றன. இந்த உறக்கம் குழந்தை, சிறுவர் மற்றும் வளர்ந்தவர் கொள்ளும் உறக்கத்தினின்றும் வேறுபடுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



விரைவுக் கண்ணசைவு உறக்கத்தின்போது முதிர்கருவின் கண்கள் முன்னும் பின்னும் நகர்கின்றன. ஆராய்ச்சியாளர் பலர் அது கனவு காண்கிறது என்று நம்புகின்றனர். முதிர்கரு கருப்பையுள் தான் எதை உணர்கிறதோ, அதற்கு என்ன தெரியுமோ அதைப் பற்றிக் கனவு காண்கிறது என்று மர். தி பியட்டிரோ ஊகிக்கிறார்.

"புதியதாகப் பிறந்த குழந்தையைப் போன்றே பிறக்கப் போகும் குழந்தையும் தன் நேரத்தில் 85–90 விழுக்காட்டளவை உறங்கிக் கழிக்கிறது. இந்த அரைத்தூக்க நிலைகளுக்கு இடையில் சிறிது நேரத்தை விழித்த நிலையிலும், மற்றும் சிறிது நேரத்தை விழிப்புணர்வு நிலையிலும் கழிப்பதாகத் தெரிகிறது" என்று மர். வில்லியம் பிப்பர் என்னும் உளவியலறிஞர் கூறுகிறார். அவர், தம் நண்பர்களுடன் முதிர்கருவின் இயல்பான மற்றும் இயல்பற்ற மூளை வளர்ச்சித் தன்மைகள் பற்றி அறியவும் குழந்தைகளின் திடீர் இறப்புக்கான நோய்க் குறி அடையாளங்களை இனங்கண்டு கொள்ளவும் இப்படிப்பட்ட உறக்க — விழிப்புச் சுற்றுகளைக் கண்காணித்தார்.

**முதிர்கருவின் அசைவு.**

விழிப்பாயினும் உறக்கமாயினும் முதிர்கரு ஒவ்வொரு மணி நேரத்திலும் ஐம்பது முறை நகர்கிறது. அப்பொழுது அது தன் உடலை வளைத்தும் விரைத்தும், தலை, முகம், உடல் உறுப்புகள் ஆகியவற்றை அசைத்தும், நனைந்த கதகதப்பான தன் அறையைத் தொட்டும் உணர்கிறது. எய்டிலசு ஆல்சு என்னும் உளவியலறிஞர். கருமுளை வெளிப்படுத்தும் தொட்டறியும் உணர்வுத் தூண்டுதலின் அளவை அறிந்து வியப்படைகின்றனர். "அது ஒரு கையால் தன் முகத்தைத் தொடுகிறது; ஒரு கையால் மற்றொரு கையைத் தொடுகிறது; கைகளைக் கொண்டு தன் பாதங்களைப் பற்றுகிறது; பாதங்களிலிருந்து கால்களைத் தொடுகிறது. ஒரு கை அதன் கொப்பூழ்க் கொடி(UMBLICAL CORD)யைத் தொடுகிறது" என்கிறார் அவர்.

மர். ஆல்சு(DR. ALS) மருத்துவமனைகளில் மகப்பேற்றுப் பிரிவுச் சூழலுக்கும் கருப்பையில் கருமுளை வளர்ந்த சூழலுக்கும் பொருத்தம் சிறிதுமில்லை என்கிறார். பல்லாண்டுகள் ஆய்வு செய்து கருப்பைச் சூழலை மருத்துவமனை மகப்பேற்றுப் பிரிவில் கொண்டு வந்தால் முதிர்கரு பிறப்பதற்குச் சில கிழமைகளுக்கு முன் கருப்பையில் வளைந்ததைப் போல் பிறந்த பின்பும் தன் முழங்கால்களை ஒன்றாக இணைக்கலாம் என்றும் கைகளால் எல்லா உறுப்புகளையும் தொடலாம் என்றும் கூறுகிறார்.

மர். தி. பியட்டிரோ கருமுளையின் இயல்பான அசைவுகளோடு கூட அது கருப்பையின் சுவரை நக்குதலையும், அதைத் தன் பாதங்க

படிப்பகம்

www.padippakam.com



ளால் உதைத்து அதைச் சுற்றிலும் நடப்பதையும் போன்ற அதன் வழக்கமற்ற செய்கைகளைக் கண்டறிந்தார். முதலில் பிறக்கும் குழந்தைக்குப் பின் பிறக்கும் குழந்தைகளுக்கு அதைவிடத் திறமையான செயல்களைச் செய்வதற்கு கருப்பையில் அதிக இடம் கிடைக்கிறது. முதல் பிள்ளைப் பேற்றுக்குப் பிறகு பெண்ணின் கருப்பை பெரியதாகவும் அதன் கொப்பூழ்க் கொடி நீளமாகவும் ஆகின்றன. அதனால் இரண்டாம் குழந்தையும் அதற்குப் பின் பிறக்கும் குழந்தைகளும் அதிக இயக்கச் செயல்களை வளர்த்துக் கொள்ளவும் அதனால் அதிகச் சுறுசுறுப்புள்ள குழந்தைகளாக வளரவுங் கூடும் என்று ஊகிக்கிறார்.

"கருமுளைகள் தங்கள் தாயின் செய்கைகளுக்கு ஏற்றாற்போல் எதிர்ச்செயல் செய்கின்றன. கருமுளையை அதன் தாய் கேளா ஒலிப்(ULTRA SOUND) படக்கருவியில் பார்த்துச் சிரிக்கத் தொடங்கும் போது அது குப்புறக் கவிழ்ந்தவாறு கருப்பையுள் மிதப்பதையும், அதன் தலை மேலும் கீழுமாகப் பந்தைப் போல் எழும்பி மெத்தை மேல் விழுவதைப் போல் செய்வதையும் நாம் காணலாம். திரையில் அதைக் காணும் தாய் சிரிக்கும்போது அது மேலும் கீழுமாக விரைவாக இயங்குகிறது" என்று அவர் கூறுகிறார்.

## முதிர்கருவின் சுவையுணர்வு.

தாய்மார்கள் அதிகக் காரமுள்ள மிளகாய் அல்லது நறுமணச் சுவையூட்டப் பெற்ற உணவுகளை விரும்பி உண்பதால் கருமுளையின் சூழலில் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. பதின்மூன்று முதல் பதினைந்து வரையிலான கிழமைகளில் முதிர்கருவின் நாக்குச் சுவையரும்புகள்(TASTE BUDS) முதிர்ந்தவர்களுடையவற்றைப் போல் உள்ளன. தன்னைச் சூழ்ந்துள்ள பனிக்குடப் பாய்மத்தில் தாயின் உணவின் மூலம் சென்றுள்ள கறிக் குழம்பு, சீரகம், பூண்டு, வெங்காயம், சாறு(JUICE) ஆகியவற்றின் சுவைகளை முதிர்கரு நன்றாக அறிகிறது.

முதிர்கருக்கள் இப்படிப்பட்ட மணங்களைச் சுவைக்கின்றனவா அல்லது இல்லையா என்பது இன்று வரை அறியப்படவில்லை. ஆனால் முப்பத்து மூன்று கிழமைகள் ஆன ஒரு முதிர்கரு வெற்று ஞெகிழி முலைக்காம்பை(PLASTIC NIPPLE)விட இனிப்பில் தோய்ந்ததை விரும்பி உறிஞ்சுகிறது என்பதை மருத்துவர்கள் அறிந்துள்ளனர். சூலி மென்னெல்லா(JULLIE MENNELLA) என்னும் உளவியல் வல்லுநர் "முதிர்கரு தன் எட்டாம் மாதத்திற்குப் பிறகு நாளொன்றுக்கு ஓர் அயிரெடை(லிட்டர்) பனிக்குடப் பாய்மத்தை விழுங்குகிறது'' என்று குறிப்பிடுகிறார். அந்தப் பாய்மம்

படிப்பகம்

www.padippakam.com



தாய்ப்பாலுக்கும் தாய் அருந்தும் உணவிலிருந்து கொண்டுவரப்படும் மணங்களுக்கும் இடையில் மணங்களின் பாலமாகச் செயற்படுகிறது" என்று கூறுகிறார்.

## முதிர்கருவின் கேட்கும் தன்மை.

முதிர்கரு சுவையுணர்வைப் பெற்றிருந்தாலும் இல்லாவிட்டாலும் அது கேட்கும் உணர்வைப் பெற்றுள்ளதை அறிவியலார் அறிந்துள்ளனர். "இருபத்துநான்கு–இருபத்தைந்து கிழமைகளைக் கடந்த குழந்தை தன்னைச் சுற்றிலும் ஏற்படும் ஒலியைக் கேட்கிறது" என்கிறார் ஏல்சு. ஆகையால் அதன் கேட்கும் உணர்வு அமைப்பு ஏற்கெனவே தாயின் கருப்பையுள் செயற்பட்டிருக்க வேண்டும். கருவுற்ற தாய்மார்கள் பலர் ஒரு கதவு படாரென்று சாத்தப்படும் பொழுதோ அல்லது வேறு உரத்த ஒலி ஏற்படும்பொழுதோ தம் வயிற்றிலுள்ள குழந்தை திடுமென அசைந்ததாகவும், கருப்பையை உதைத்ததாகவும் கூறியுள்ளனர்.

"அப்படிப்பட்ட குறுக்கீடுகள் இல்லாவிட்டாலுங்கூடத் தாயின் கருப்பை ஓர் அமைதியான இடமாக இல்லை. கருவுற்ற பெண்ணின் கருப்பையில் நீர்வகை ஒலியளவி(HYDROPHONE)யைச் செலுத்தி அங்கு ஏற்படும் ஒலியளவை அறிந்தனர். நம் வீடுகளில் நாம் கேட்கும் பின்னணி ஒலியை ஒத்ததாக அது இருந்தது" என்று தி. பியட்டிரோ கூறுகிறார். தாயின் குருதிக் குழாயில் குருதி செல்கையில் ஏற்படும் நெஞ்சகத் துடிப்பொலியும், குடலிலும் இரைப்பையிலும் ஏற்படும் 'களகள'வென்னும் ஒலியும் குமுறல் ஒலியும், தசைநார்கள் எலும்புகள், பாய்மங்கள் வழியாக வடிக்கப்பட்டு வரும் ஒலியும் பனிக்குடப் பாய்மம் வடித்து அனுப்பும் மற்றவர்கள் ஒலியும் அந்த ஒலியில் அடங்கும். தாய் பேசும்போது முதிர்கருவின் நெஞ்சகத் துடிப்பின் அளவீடு குறைவதாக 'பிப்பர்' கூறுகிறார். கருமுளை அந்த ஒலியை இனங்கண்டு கொள்வது மட்டுமின்றி அதனால் அமைதியும் அடைகிறது என்கிறார் அவர்.

## முதிர்கருவின் பார்வை.

குழந்தைகளுக்குப் பார்வைதான் கடைசியாகப் பெருக்கமடையும் உணர்வு. பிறந்த குழந்தை கொண்டுள்ள அதே திறமையோடு, பிறக்கப் போகும் குழந்தை ஒலியையும் உருவத்தையும் காணக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். கருப்பை முற்றிலும் அமைதியாக இல்லாதது போலவே அது முழுவதும் இருட்டாக இருக்கவில்லை. ஒரு முதிர்கரு எதிர்க் குறிப்புத் தருவதற்குப் போதுமான பார்வை உணர்வுத் தூண்டுதலானது அதன் தாய் வெயில் வெளிச்சம்படுமாறு இருக்கும்பொழுது அந்த வெளிச்சம் தசைநார்வழி வடிக்கப்பட்டுக் கருப்பையை அடைவதால் ஏற்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



விளக்கின் வீச்சொளி(FLASH LIGHT) தாய் வயிற்றில் படும்பொழுது கருமுளை அதற்கு எதிர்ச்செயல் செய்வதாகச் சப்பானிய அறிவியலாளர்கள் கூறுகின்றனர். ஆனால் கருமுளை மீது அல்லது பிறக்கப்போகும் குழந்தைமீது கண்கூசும் ஒளியைப் பாய்ச்சுவது தீங்காகும் என்று பிற ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். பிறப்புக்கு முற்பட்ட குழந்தை நீண்ட நாட்கள் கருப்பையுள் அதிக உயிர்வளிச் செறிவுக்கு(HIGH CONCENTRATION OF OXYGEN) ஆட்பட்டிருந்ததால் அதன் வளர்ச்சியின்போது அதன்மீது தவறான நேரத்தில் பாய்ச்சும் அதிக ஒளி கண்விழித் திரையைக்(RETINA) கெடுக்கக்கூடும் என்று ஏல்சு கருதுகிறார்.

ஆறு மாதக் குழந்தை பதினான்கு கிழமைகட்கு முற்பட்டுப் பிறந்தால் அதன் மூளை, கண்களிலிருந்து வரும் ஒளிக்குறிப்பை மூளையின் மேற்பகுதிக்குக் கடத்தி அங்கிருந்து அதைச் 'சேதி'யாக இணைப்பதற்கு அதன் முன்பகுதிக்கு அனுப்ப அணியமாகவோ அல்லது அதை எதிர்பார்ப்பதாகவோ இல்லை. அதிக ஒளியை அவ்வளவு முன்பாக அந்த முதிர்கருவைப் பார்க்கும்படி கட்டாயப் படுத்தினால் அதனால் ஏற்படும் விரைவுத் தூண்டல்களால் அதன் மூளை வளர்ச்சிக்குத் தீங்கு ஏற்படும் என்று 'ஏல்சு' கூறுகிறார்.

**முதிர்கரு கற்றல்.**

உணரும், கேட்கும், பார்க்கும் திறமைகளோடுகூட முதிர் கருவுக்குக் கற்கவும் அதை நினைவிற் கொள்ளவும் தேவைப் படும் ஆற்றல் ஏற்படுகிறது. இந்தச் செயற்பாடுகள் எல்லாம் அடிப்படைக் கூறுகளாகவும், தன்னியல்பாக நிகழக் கூடியனவாகவும் உயிர் வேதியல்(BIO–CHEMISTRY) சார்ந்தனவாகவும் உள்ளன. சான்றாக ஒரு முதிர்கரு எச்சரிக்கை ஒலிக்கு எதிர்க் குறிப்பு தெரிவித்த பிறகு, தொடர்ந்த அதிக இரைச்சலுக்கு அது எதிர்க் குறிப்புத் தெரிவிப்பதை நிறுத்திவிடுவதைக் கூறலாம். தன் தாயின் குரலொலிக்கு எதிர்க் குறிப்புத் தெரிவிப்பதில் அது பழக்கத்திலுள்ள முதிராத் தன்மையில் தான் கற்பதைத் தெரிவிக்கிறது என்று 'பிபர்' கண்டுள்ளார்.

முதிர்கரு தான் அதிகத் தகுதியுடையது எனத் தானே மெய்ப்பித்துள்ளது. 1980இல் உளவியல் பேராசிரியர் அந்தோனி சேம்சு தி காசுபர்(ANTHONY JAMES DE CASPER) என்பவரும் அவர் நண்பர்களும் ஒலிக்கும் கருவியொன்றை வடிவமைத்தனர். அதன் மூலம் குழந்தை ஒருவகை ஒலிகளை ஈர்த்து விரைவாகக் கேட்பதற்கும் மற்றொரு வகை ஒலிகளை ஈர்த்து மெதுவாகக் கேட்பதற்கும் வகை செய்தனர். "பிறந்து சிலமணி நேரத்திலேயே ஒரு குழந்தை – தன் தாயின் பேச்சொலியை முன்பே அறிந்திருப்பதால்

படிப்பகம்

www.padippakam.com



– புதியவர் பேச்சொலியை அது விரும்புவதில்லை. அது, அந்தக் குழந்தை அந்தப் பேச்சொலியை ஏற்கெனவே கற்று நினைவில் கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது" என்பதாகத் தி காசுபர் கண்டுபிடித்தார்.

மேலும் அவர்கள் குழந்தையின் மனம் செய்யும் அருஞ்செயலைக் கண்டறிந்தனர். புதிய குழந்தை தன் தாயின் பேச்சொலியை மற்றவர் பேச்சொலியினின்றும் இனம் காண்பது மட்டுமின்றி, அவள் பேச்சொலி பனிக்குடப் பாய்மவழி வடிக்கப் பட்டுச் செல்வதைப் போன்ற ஒலியை நேரிடை ஒலியைவிட நன்றாகக் கேட்கக் கூடும். அதற்கு அயலவர் வாடை பிடிக்காது. தன் தாயோ அல்லது மற்றவர்களோ பேசும் அயல்மொழியைவிடத் தாய் பேசும் வழக்கமான பேச்சொலியை அது கேட்கின்றது.

**முதிர்கருவின் தனித்தன்மை.**

எல்லாக் குழந்தைகளும் தனி மனப்பாங்கைக் குறிப்பிட்டுக் காட்டும் தெளிவான வேறுபாட்டுடனும், செயற்பாங்குடனும் பிறக்கின்றன. குழந்தைகளின் இந்தப் பண்புக் கூறுகள் கருப்பையில் எப்பொழுது எப்படித் தொடங்குகின்றன என்பதை அறிய ஆய்வுகள் நடைபெறுகின்றன. 1996இல் திருவாட்டி டி பியட்டிரோவும் அவர் உடனுழைப்பாளர்களும் முதிர்கருவின் மனப்போக்குப் பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டனர். அவர்கள் அப்பொழுது முப்பத்தொரு முதிர் கருக்களின் நெஞ்சகத் துடிப்பின் அளவீட்டையும் அசைவுகளையும் அவை பிறப்பதற்குமுன் ஆறு தடவைகளும் பிறந்தபின் இரு தடவைகளும் எடுத்தனர். இப்பொழுது அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட முதிர்கருக்களை ஆராய்கின்றனர்.

முதிர்கருக்கள் கருப்பையில் அதிகச் சுறுசுறுப்பாகவும் அதிகச் சிடுசிடுப்பாகவும் உள்ளன. ஒழுங்கற்ற உறக்க – விழிப்புப் பாங்குடைய முதிர்கருக்கள் இளங் குழந்தைகளைப் போல் குறைவாக உறங்குகின்றன. அதிக நெஞ்சகத் துடிப்பு அளவீட்டையுடைய முதிர் கருக்களின் தன்மைகள் முன்கூட்டி அறியக் கூடாதவையாய் உள்ளன. அப்படிப்பட்ட முதிர்கருக்கள் சுறுசுறுப்பு அற்றவையாய் ஆகின்றன என்பதை அவர்கள் கண்டனர்.

"குழந்தைகளின் நடத்தை அவை பிறக்கும்போது தொடங்குவதில்லை. அது பிறப்புக்கு முன்பாகவே தொடங்குகிறது; முன்கூட்டியே அறிந்துகொள்ளும்படி வளர்ச்சி பெறுகிறது" என்கிறார் திருவாட்டி தி. பியட்டிரோ" முதிர்கருவின் சூழல்தான் அதன் வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளது. முதிர்கரு, தாயின்மூலம் பெரிய அளவில் இயக்குநீர்க் குளியல்(HARMONAL BATHING) செய்கிறது. அதனால்

படிப்பகம்

www.padippakam.com



அதன் நேரமுறை ஒழுங்குகள்(CHRONOLOGICAL RHYTHMS) எல்லாம் தாயின் உறக்க–விழிப்புச் சுற்றுகளாலும்(CYCLES) அவள் உணவருந்தும் பாங்குகளாலும் அசைவுகளாலும் அமைகின்றன" என்கிறார் அவர்.

மன அழுத்தத்தின் கரணியமாகத் தாய் வெளிப்படுத்தும் இயக்குநீர்கள் நெருக்கடியானவை என்று தெரிகிறது. தி. பியட்டிரோ "அதிக மன அழுத்தத்திற்கு ஆட்படும் தாய்மார்களுக்கு அதிகச் சுறுசுறுப்பும் கடுகடுப்பும் கொண்ட குழந்தைகள் பிறக்கின்றன. அதிக மன அழுத்தத்திற்கு ஆட்படும் பெண்கள் பெரும்பாலும் வேலை செய்பவர்களாகவே உள்ளனர்" என்று கூறுகிறார். இந்நாட்களில் கருவுறுதலின் சிக்கல்கள் முழுதும் தெளிவற்ற நிலையில் இருந்த போதும், பெண்கள் தாங்கள் பிள்ளை பெறும் கடைசி நாள் வரையிலும் வேலை செய்கின்றனர். அது நம் பண்பாடாக இருக்கலாம். ஆனால் அது 'பித்துக்குளித்தனம்' என்கிறார் அவர்.

வேலை செய்யும் பெண்களுக்கு அதிக மன அழுத்தம் ஏற்படுகிறது என்பதை ஏல்சு ஏற்றுக்கொள்கிறார். ஆனால் கருவுற்ற பின் தாயின் உடலில் வெளிப்படும் இயக்குநீர்கள், தாயையும் சேயையும் அதைத் தாங்கிக்கொள்ளச் செய்கின்றன. தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் மன அழுத்த எதிர்ச் செயல்கள் வேறு உள்ளன. "வேலை செய்யும் கருவுற்ற பெண்கள் வேலை செய்யாமல் இருக்கும் கருவுற்ற பெண்களைவிட வேறுபட்டவர்கள்" என்று ஏல்சு கூறுகிறார்.

வேறு வழியே இல்லை; வேலை செய்துதான் ஆகவேண்டும் என்னும் நிலையிலுள்ள பெண்களைவிட அவள் வேறுபட்டவள். தி. பியட்டிரோவின் ஆய்வுகள் நடுத்தர வகுப்புப் பெண்கள், மற்றும் வறியநிலைப் பெண்கள் ஆகியோர் முதிர்கருக்கள் நரம்பியல் இயக்கப்படி சுறுசுறுப்புக் குறைந்தும் நெஞ்சகத் துடிப்பளவு வேறுபாடுகள் குறைந்தும் இருப்பதைக் காட்டுகின்றன. இருந்த போதிலும் வறியநிலைப் பெண்கள் வேலை செய்யும் நடுத்தர வகுப்புப் பெண்களைக் காட்டிலும் குறைந்த மன அழுத்தம் கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார். ஊட்டவுணவுப் பற்றாக்குறை, சுற்றுச் சூழல் கேடு ஆகியவற்றுக்கு ஆட்படும் வறியநிலைப் பெண்களின் முதிர்கருக்கள் ஊறுபாட்டுக்கு ஆட்படுகின்றன என்று தி. பியட்டிரோ ஐயப்படுகிறார்.

எனவே உடல் நலமும் மன வளமும் கொண்ட குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் கருவுற்ற பெண்கள் ஊட்ட உணவை உண்ணுதலும், அளவோடு அன்றாட உடலுழைப்பை மேற்கொள்ளுதலும், போதிய ஓய்வு கொள்ளுதலும், மன அழுத்தங்களுக்கு உட்படாமல் இருத்தலும் மருந்தருந்தும் சூழல்களையும், சுற்றுச் சூழல் கேட்டுக்கு ஆட்படுதலையும் தவிர்த்தல் வேண்டும். ○

படிப்பகம்

www.padippakam.com

# சுவையான குளம்பி

— கடுங்கோ

"கடந்த மூன்று மாதமாகவே தங்களைக் காணவேண்டும் என்று நினைப்பு. இன்றுதான் வரமுடிந்தது" என்று என் எதிரில் அமர்ந்த வாறே பேச்சைத் தொடங்கினார் ஐயனார்.

"சரி! முதலில் குளம்பியைக் குடித்துவிட்டு அப்புறம் பேசுங்கள்; ஆறிவிடப் போகிறது" என்றார் என் துணைவியார்.

"அதைப் பற்றித்தான் பேச எண்ணியிருந்தேன். நீங்களே அடி யெடுத்துக் கொடுத்துவிட்டீர்கள்" என்ற ஐயனார், குளம்பியைக் கையில் எடுத்தபடியே "புதின எழுத்தாளர் இந்திராபார்த்தசாரதி என்பவர் என்ன சொல்லியிருக்கிறார் பார்த்தீர்களா.....?" என்றார்.

அம்மையார் அமைதியாய் இருந்தமையால் தாமே தொடர்ந்தார்.

" 'தமிழகத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தமிழ்மொழியைத் தமிழ்தானா என்று நினைக்கும் அளவுக்குப் பிறமொழியைக் கலந்து பேசுவதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்று தினமணிக் கதிரின் சார்பில் அவரிடம் நேருரை பெற்றவர் வினவியிருக்கிறார். அதற்கு அவர் 'பழக்கத்திற்கு வந்துவிட்ட பிறமொழிச் சொற்களை அப்படியே வைத்துக்கொள்ளலாம். அவற்றுக்குத் தமிழ் தேட வேண்டிய 'அவசியம் இல்லை' என்று மறுமொழி கூறியிருக்கிறார்".

"அப்படியா....?"

"அவர் அதோடு விடவில்லை. 'காப்பியை ஏன் குழம்பி என்று கூறவேண்டும்?' என்றும் ஒரு போடுபோட்டிருக்கிறார்!"

ஐயனார் கூறியதைக் கேட்ட அம்மையார், "பழக்கத்திற்கு வந்து விட்டவற்றையெல்லாம் அப்படியே வைத்துக்கொள்ளலாம் என்றால், உடன்கட்டை ஏற்றுவது முதல் சிற்றூர்ப்புறக் கடைகளில் தாழ்த்தப் பட்டோருக்குத் தனிக்குவளைகளில் தேநீர் கொடுப்பதுவரை எல்லாமே நீடிக்க வேண்டியதுதான்!" என்று கூறிவிட்டு, அவ்விடத்திலிருந்து அகன்றார்.

ஐயனார் என்னை விடுவதாக இல்லை.

"அந் நேருரையில் அவரே பயன்படுத்தியுள்ள 'பல்கலைக்கழகம்', 'பரிந்துரை', 'நூல்நிலையம்', 'உறுப்பினர்' என்னுஞ் சொற்களெல்லாம் எப்போது, எப்படி அவருக்குப் பழக்கமாயினவாம்?"

என் வினாவைக் கேட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் ஐயனார்.

"இவற்றைப்' பற்றியெல்லாம் நினைத்துப்பார்க்கவேனும் அவருக்குத் திறனிருப்பதாகத் தெரியவில்லை. 'மொழி என்பது கருத்துப் பரிமாற்றக் கருவிதானே!' என்கிறார் ஐயா அவர்"..

"ஏதோ, தொட்டகுறை விட்டகுறை போலும்! மொழியெனப் படுவது கருத்துப் பரிமாற்றக் கருவி மட்டுமன்று. அது 'உணர்வினால் முனைப்பது; மாந்தரின் முனைப்பு; கல்விக்கு அடிப்படை; பண்பு ஒளிர் விளக்கம்; உள்உயிர் முழக்கம்; இனநல முயக்கம்!' என்றெல்லாம் எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் இவர்களின் மரமண்டையில் ஏறுவதில்லை!"

படிப்பகம்

www.padippakam.com



"இந்தக் கூத்தில் அவர் ஒரு பேராசிரியராம்!" சிரித்தபடியே கூறினார் ஐயனார். என்னால் சிரிக்கமுடியவில்லை!

"அவரிடம் பயின்ற மாணவர்கள்மீதுதான் இரக்கம் கொள்ள வேண்டியுள்ளது!"

"இவரைப் போன்றவர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள் ஐயா. தில்லித் திறந்தவெளிப் பல்கலைக் கழக மேனாள் துணை வேந்தர் முனைவர் வா.செ. குழந்தைசாமிகூட முன்பு ஒரு முறை 'காபியைக் குழம்பி என்று பயன்படுத்துவது குழப்பத்தையே ஏற்படுத்தும்!' என்று கூட்டத்தில் கிண்டலடித்த செய்தி ஏடுகளில் வெளியாகியிருந்தது."

"ஆமாம். படித்த நினைவிருக்கிறது! " 'காபி', 'காப்பி' என்று கூறப்படும் பருகையை (பானத்தை) அறிஞர்கள் யாரும் 'குழம்பி' என்று வழங்குவதில்லை. 'குளம்பி' என்பதையே 'குழம்பி' என்று முனைவர் வா.செ. குழந்தைசாமி, பேரா. இந்திராபார்த்தசாரதி ஆகியோரும் பிறரும் அறியாமையின் விளைவாகிய தம் வெறுப்பை ஏகடியமாக வெளிப்படுத்துகின்றனர்!"

இவ்வாறு நான் கூறியவுடன் "இந்தக் குளம்பி குழம்பி இன்னும் பலரைக் குழப்பிக்கொண்டிருக்கிறது. ஆகவே அதைப்பற்றிச் சற்று விளக்கமாகச் சொல்லுங்கள் ஐயா!" என்றார் ஐயனார்.

"குளம்பியைப் போலவே குளம்பி என்னும் சொல்வரலாறும் சுவையானதே!

விலங்குகளின் பாதத்திற்குக் குளம்பு என்பது பெயர். ஆடு, மாடு போலுங் கொம்புடைய விலங்குகட்கு இரட்டைக் குளம்பும் குதிரை, ஒட்டகம் போலுங் கொம்பிலா விலங்குகட்கு ஒற்றைக் குளம்பும் இருப்பதைக் காணலாம். குதிரையினுடையது ஒற்றைக் குளம்பாக இருந்தாலும் அது இரட்டைக் குளம்பாக வளர்வதற்கான தொடக்கம்போல் அவ் வொற்றைக் குளம்பிலேயே ஒரு வகிடு – சிறுபள்ளம் இருக்கும். மொச்சைக் கொட்டை, புளியங்கொட்டை முதலியன போலல்லாமல் குதிரைக் குளம்பு போன்று நடுவிற் பள்ளங்கொண்ட கொட்டையே குளம்பிக் கொட்டை.

குதிரையின் குளம்பைக் குறிக்கும் HOOF என்னும் ஆங்கிலச் சொல் COFF என்னும் கிரேக்கச் சொல்லின் திரிபு என்பது அறியற் பாலது. ஆங்கிலத்தில் COFFEE என்று வழங்கப்பெறுவது குதிரையின் குளம்பு போன்ற வடிவமைப்புடைய ஒருவகைக் கொட்டையைக் கொண்டு ஆக்கப்பட்ட பருகையைக் குறிக்கின்றது. ஆகவே 'COFFEE'யைக் குளம்பி என்னும் மொழிஞாயிறு பாவாணரின் சொல்லாக்கம் பொருள்பொதிந்த சிறப்புடையது!"

அமைதியாய்க் கேட்டுக்கொண்டிருந்த ஐயனார் "குளம்பி, சுவையாகத்தான் இருக்கிறது!" என்று கூறி, மேலும் ஒரு குவளைக் குளம்பிக்கு அடிபோடலானார்! ■

படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# தமிழ்த் தேசிய இன அடையாளச் சிக்கல்

— முனைவர் த. வெற்றியழகன்
(செயராமன்)

திராவிட இயக்கம் திசைமாறி, திராவிடக் கட்சிகள் பதவி அரசியலில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட காலத்தில், தமிழுணர்வைப் பாதுகாத்தவர்களுள் முதன்மையானவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள். தமிழின உணர்வுத் தணலைப் பாதுகாத்ததுடன் தென்மொழி நாற்றாங்கால் பல தமிழ் இயக்கங்களுக்கும் நாற்றுகளைப் படைத்தது. 1971 முதல் 1983 வரை தமிழுணர்வின் தளர்வுக்காலம் அல்லது உறக்கக்காலம் (HYBERNATION) என்று வரலாற்றில் பதிவு செய்யலாம். 1983-ஆம் ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த தமிழினப் படுகொலைகள், தமிழகத் தமிழரிடையேயும், உலகத் தமிழரிடையேயும் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரின் தமிழுணர்வு வீச்சு மீண்டும் தமிழகத்தில் ஏற்பட்டது.

1980 வாக்கில் பல புதிய தமிழ் இயக்கங்கள் தோன்றின. திராவிடக் கட்சிகளிடமிருந்து மாறுபட்ட தமிழ்த் தேசிய உணர்வை முன்னெடுத்துச் செல்லத் தொடங்கின. தந்தை பெரியாரின் கொள்கைகளும், மார்க்கசியச் சிந்தனையும், இலெனினியப் பாதையும் தமவெனக் கொண்ட புதிய இளைஞர் குழுக்கள் செயல்படத் தொடங்கின. இக்காலக் கட்டத்தில் மார்க்கசியம்—பெரியாரியம்—தமிழ்த் தேசியம் என்ற முப்பெரும் சிந்தனைகள் ஒருங்கிணைந்தன. இதே காலக் கட்டத்தில் தான், திராவிடக் கட்சிகள் இந்தியத் தேசியத்தை உயர்த்திப் பிடித்தன. தமிழ்த் தேசிய உணர்வுள்ள இயக்கங்களும், கட்சிகளும் மூன்று கொள்கைகளுள் ஏதாவது ஒன்றைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. அவை:

1. மாநிலத் தன்னாட்சி.
2. மாநிலங்களுக்குத் தனியாட்சி வரையறையுரிமை.
3. தனித்தமிழ் நாடு.

இவ்வியக்கங்களை மார்க்கசிய இலெனினிய இயக்கங்கள், பெரியாரிய இயக்கங்கள், தமிழ் இனவுணர்வு இயக்கங்கள் எனவும் பிரிக்கலாம்.

1991-ஆம் ஆண்டில் மாபெரும் திராவிடக் கட்சியான தி.மு.க. வின் ஆட்சி கலைக்கப்பட்டு, தேர்தலில் தி.மு.க. தோல்வியையும் தழுவியது. கன்னட பிராமணப் பெண்ணாகிய செயலலிதா தலைமை யேற்ற அ.தி.மு.க. வென்றது. 1967-இல் இருந்து தமிழகத்தில் ஏதாவது ஒரு திராவிடக் கட்சியே ஆண்டு வந்துள்ளது. எனினும், திராவிட

படிப்பகம்

www.padippakam.com



உணர்வு தேய்ந்து மழுங்கித் தமிழ் இனவுணர்வு சிதைந்து போயிருப்பது 1991-இல் தெளிவாகத் தெரிந்தது. திராவிட இயக்கங்களின் பரிமாணத் தேய்மானம் பலவகையிலும் வெளிப்படுகிறது.

1990 முதலே, பல தமிழ் இயக்கங்களும் பதவி தேடா அரசியல் கட்சிகளும் தமிழகத்திற்குத் தனியாட்சி வரையறை உரிமை தேவை; ஓர் உண்மையான கூட்டாட்சி இந்தியாவிற்குத் தேவை எனத் தீர்மானங்களை நிறைவேற்றின. சில இயக்கங்கள் மார்க்கசிய - இலெனினியப் பாதையில், விடுதலை பெற்ற தனித்தமிழ் நாடு கோரி 1980 வாக்கில் இருந்தே படைக்கலம் தாங்கின. 1991-ஆம் ஆண்டில் இராசீவ் திருப்பெரும்பூதூரில் கொலையுண்டார். அதைத் தொடர்ந்து ஈழ விடுதலையை ஆதரிப்போர் கடும் அடக்குமுறைக்கு ஆளாயினர். ஈழ விடுதலை கேட்போரையும், ஆதரிப்போரையும் திராவிடக் கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு ஒடுக்கின. இது ஓர் புதிய தெளிவினைத் தமிழ் உணர்வாளர்களிடையே ஏற்படுத்தியது. இத் தெளிவின் வெளிச்சத்தில் புதிய தமிழ் உணர்வாளர்கள், தமிழ்த் தேசிய உணர்வை முன்னெடுத்துச் செல்கிறார்கள்.

### முரண்பாடுகள்:

தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மற்றும் கட்சிகள் இந்தியா என்ற அமைப்பிற்குள் மனக்குறை கொள்ளப் பல காரணங்கள் உள்ளன. அத்தகைய மனக்குறை தமிழ்த் தேசிய உணர்வுக்கு உரமூட்டுகிறது.

**1. இந்திய அரசியலமைப்பின் குறைபாடுகள்:**

இந்திய அரசியலமைப்பு, கூட்டாட்சி என்ற பெயரில் ஒற்றையாட்சியைத் தருகிறது. மாநில உரிமைகள் மிதிக்கப் படுகின்றன. இந்திய அரசியலமைப்பு, இந்து மதக்காரர்களுக்கும், பிராமணர்களுக்கும், இந்தி மொழிக்கும் இந்தியத் தேசிய இனத்திற்கும் சார்பாக உள்ளது.

**2. நடுவணரசு – மாநில அரசு உறவுகள்:**

குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள நெருக்கடி நிலைக் கால அதிகாரங்கள், 356-ஆவது அரசியல் சட்டப் பிரிவும் ஆட்சி கலைப்புகளும், தேவையற்றதாகக் கருதப்படும் மாநில ஆளுநர்ப் பதவி, பொருளியலின் அடிப்படையில் நடுவணரசை நத்திக் கிடக்கும் மாநிலங்களின் அவலம், மாநிலங்களைக் கேட்காமலே மாநிலங்களின் நிலைப்பாட்டை வரையறுக்கும் வலிமையான நடுவணரசு ஆகியவை தமிழகத்துக்கு அவ்வப்போது கசப்பூட்டி வந்துள்ளன.

**3. மாநிலங்களுக்கு இடையேயான சிக்கல்கள்:**

காவிரி யாற்றுநீர்ப் பங்கீட்டுச் சிக்கலும், தமிழர்கள் 1991-இல் தாக்கப்பட்டு, ஓர் இலக்கம் தமிழர்கள் ஏதிலிகள் ஆக்கப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டமையும், தமிழ்நாட்டிற்கும் ஆந்திரம், கர்நாடகம் மற்றும் கேரளம் ஆகியவற்றுக்கும் இடையேயான எல்லைச் சிக்கலும், இலங்கையுடனான கச்சத்தீவுச் சிக்கலும், தாக்குதல்களுக்காட்படும் தமிழ் மீனவர் துன்பங்களும், தமிழகம் மார்வாடி, குசராத்திகளின் வேட்டைக் காடாக மாறியுள்ள நிலையும், தமிழ்த் தேசிய உணர்வை வளர்த்து வருகின்றன.

**4. பிற சிக்கல்கள்:**

இந்தியை மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாக அறிவித்துள்ளமை (அரசியல் சட்டப் பிரிவு 343), தமிழ் மொழியை ஆட்சி மொழியாகத் தமிழகத்தில் அறிவித்திருந்தும் தமிழக அரசு அதனை முழுமையாகச் செயல்படுத்தாமை, 'வழக்கற்ற மொழி' யான சமற்கிருதத்திற்குப் பலகோடியும் தமிழுக்குப் புறக்கணிப்பும் என்ற நடுவண் அரசின் நடவடிக்கை, இடஒதுக்கீட்டுக்குத் தேசியக் கட்சிகளின் எதிர்ப்பு, சேதுக் கால்வாய்த் திட்டம் போன்றவற்றைச் செயல்படுத்தாமை போன்றவை.

இவை, இந்தியாவில் தமிழர்கள் நிலையாக இரண்டாம் தரக் குடி மக்களாகவே வாழச் செய்யும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளன.

## தமிழியக்கங்களும், குறிக்கோள்களும் — சில சிந்தனைகள்:

தமிழ் இன உணர்வுள்ள கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகள் மூன்று வகையான குறிக்கோள்களாகக் கொண்டு இயங்குகின்றன. அவை:

**1. மாநிலத் தன்னாட்சி கோருபவை:**

தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. ஆகியவை. மார்க்கசிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி ஓர் உண்மையான கூட்டாட்சியை வேண்டுகிறது.

**2. தன்னாட்சி வரையறை உரிமை கோருபவை:**

பா.ம.க., தமிழர் தேசிய இயக்கம், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழ் தமிழர் இயக்கம், மார்க்கசிய-இலெனினிய இயக்கங்கள்.

**3. தனித் தமிழ்நாட்டு கோரிக்கை வைப்பவை:**

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், தமிழ் இன விடுதலைக் கழகம், தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி(எம்.எல்), தமிழ்த் தேச மக்கள் விடுதலை இயக்கம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தமிழக மாணவர் பேரவை, தமிழக மக்கள் உரிமை இயக்கம், தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சி, தமிழக ஆய்வரண் (பெங்களூர்).

*1993*-ஆம் ஆண்டு 'தமிழ்த் தேசத் தன்னுரிமை முன்னணி ஏற்படுத்தப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



## கருவி(ஆயுதம்) தாங்கிய தமிழ்த் தேசியம்:

மக்கள் போராட்டக் குழு, தேசிய இனச் சிக்கலுக்கு முதன்மை தராமல் கருவிப் புரட்சி மட்டுமே பேசிய காலக் கட்டத்தில் புலவர் கலியபெருமாளும், தமிழரசனும் அவ்வியக்கத்தைவிட்டு வெளி வந்தனர். 1984-இல் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியைக் கட்டினர். பிற கட்சிகளின் போராட்ட முறையை விட்டுப் போர் முறையைத் தேர்ந்தெடுத்தனர். அவர்கள் தமிழ் இன விடுதலையைத் தம் குறிக்கோளாகக் கொள்ளப் பெங்களூர்க் குணாவும் காரண மாயிருந்தார். 1986-இல் குடமுருட்டி ஆற்றுப் பாலக் குண்டுவெடிப்பு, 1987-இல் மருதையாற்றுப் பாலக் குண்டுவெடிப்பு ஆகியவை முகாமையான தீவிரப் போக்கு நிகழ்வுகள். 1987-இல் பொன்பரப்பி வைப்பகக் கொள்ளை நிகழ்ச்சியில் தமிழரசன் கொல்லப்பட்டார். ஆனால், இதன்பின் ஏராளமான இலெனினிய இயக்கங்கள் தமிழக விடுதலையை அல்லது தன்னுரிமையைத் தம் குறிக்கோளாக ஏற்றுக் கொண்டன.

## தமிழ் இயக்கங்களின் கற்பனையில் தமிழ்நாடு:

தமிழ் உணர்வாளர்கள் தமது எதிர்காலத் தமிழ்நாடு எப்படி இருக்கவேண்டும் எனப் பல கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்நாட்டைவிட நூற்றுஎழுபத்தெட்டு நாடுகள் மக்கள் தொகையைப் பொறுத்தவரை சிறியனவாக இன்று உலகில் உள்ளன. தமிழ்நாட்டைக் காட்டிலும் உலக நாடுகளில் இருபது மட்டுமே அதிக மக்கள் தொகை கொண்டிருக் கின்றன. உலக நாடுகளில் நூற்றுஆறு நாடுகள் தமிழ்நாட்டைவிடவும் பரப்பளவில் சிறியவை. ஆகவே தமிழ்நாடு தனித்து இயங்க முடியுமா என்ற வினா தேவையில்லை. தமிழ்நாட்டுக்குத் தேவையான உணவை விளைவிக்க நிலவளமும், நீர்வளமும் உள்ளன. தமிழ்நாட்டின் ஆண்டு உணவுத் தேவை 90 இலக்கம் கல்லெடை. 1993-94-இல் இதன் ஆக்கம் 100 இலக்கம் கல்லெடை. இந்தியாவின் தொழில் ஆக்கத்தில் 10.7 விழுக்காடு தமிழகத்தின் பங்காகும். தமிழ்நாட்டின் மின்னாக்கம் 25,712 (1993-94) பிறருக்குத் தானம் செய்யாமல் தமிழ்நாடு பயன்படுத்தினால் இதுவே தேவைக்கு மேலாகும். உலகின் முகாமையானதும் ஆசியாவிலேயே பெரியதுமான நிலக்கரி வயலாகிய நெய்வேலி தமிழ்நாட்டில்தான் உள்ளது. இது மொத்தப் பழுப்பு நிலக்கரிப் படிவங்களில் 90 விழுக்காடு ஆகும். மொத்தம் 256 சதுர அ.மா. தொலைவுக்குப் பரவியிருக்கிறது. பீகார் அளவிற்கு கனிப் பொருள் இல்லாவிட்டாலும், தமிழகத்தில் இரும்புத் தாது(சேலம்), மற்றும் பல தாதுப் பொருள்கள், களிமண், சுண்ணாம்புக்கல் முதலானவை பரவிக் கிடக்கின்றன. இந்தியாவின்

படிப்பகம்

www.padippakam.com



மொத்த உப்பு விளைச்சலில் 11 விழுக்காடு தமிழகத்தின் பங்கு ஆகும். சுற்றுலா இன்னமும் வளர்க்கப்பட வாய்ப்புகள் உள்ளன. சேதுக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்பட்டால் இலங்கையின் கொழும்புத் துறைமுகம் மதிப்பிழக்கும். மேற்கிலிருந்து கிழக்கே செல்லும் கப்பல்கள் சேதுக் கால்வாயைப் பயன்படுத்தினால் 350 கல் தொலைவு மிச்சமாகும். ஆகவே தமிழகத்தின் பனாமா கால்வாயாக இது மாறும்; தமிழகம் வளம் கொழிக்கும்.

விடுதலை பெற்ற தமிழ்நாடு என்பது குமுகாய மாற்றங்களை உள்ளடக்கியது. பெரியாரிய — மார்க்கசியக் கொள்கைகளை உள்ளடக்கியதாக இருக்கும். அங்கே நாலாஞ்சாதிப் பட்டம், தாழ்த்தப்பட்டோர் நிலை ஒழிக்கப்படும். இந்திய அரசியல் சட்ட நெறிகள் மறைமுகமாகச் காதியமைப்பைக் கட்டிக் காவல் செய்கின்றன. அத்தகைய பிரிவுகள் ஒழிக்கப்படும், தீண்டாமையும் சாதியமும் முழுமையாக ஒழிக்கப்படும், பெண் – சமநிலை பேணப்படும், ஒரு நிகரமைக் குமுகாயத்தையும், பொருளியலையும் இலக்காகக் கொண்டுள்ளனர். தமிழ்மொழி மட்டுமே கல்வி மொழி, ஆட்சிமொழி, மற்றும் வழிப்பாட்டு மொழியாகும். தமிழகம் ஒரு மக்கள் குடியரசாக விளங்கும்.

ஆனால், ஒரு தனித்தமிழ் நாடு அமையுமா என்பதை யாரும் உறுதிகூற முடியாது.

*முடிவுரை:*

தமிழர்க்கள் ஒரு தேசிய இனம்(NATION) என்பது மறக்கமுடியாத ஒன்றாகும். தமிழின ஓர்மை என்பது கழகக் காலம் தொட்டே வளர்ந்து உறுதிபெற்ற ஒன்றாகும். அரசியல் விடுதலையை இழந்த தமிழர்கள் தம் இன, மொழி முதன்மையை இழந்தார்கள். 19-ஆம் நூற்றாண்டில் அறிஞர் கால்டுவெல்லின் ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ தனித்தமிழ் இயக்கத்துக்கும் திராவிட இயக்கத்துக்கும் இட்டுச் சென்றது.

இந்தியத் தேசியத்தின் உள்ளீடு இந்துத் தேசியமாகும். நால்வரண முறை நிலைநிறுத்தம், பிராமணீய மீட்சி, பெரும்பகுதி பிராமணர் — அல்லாதாருக்கு நாலாஞ்சாதிப் பட்டம் என்பவை இந்தியத் தேசிய இயக்கத்தின் பிரிக்கமுடியாத கூறுகளாக இருந்தன என்பது வரலாற்று உண்மை. இந்திமொழி 1938-இல் சென்னை மாகாணத்தில் கட்டாயமாக்கப்பட்டபோது, தமிழ் உணர்வுடைய பலரும் தமிழர் என்ற அடையாளத்துடன் கைகோத்தனர். இதில் தொடங்கித் தமிழ்த் தேசிய உணர்ச்சி பெரியாராலும், அறிஞர் அண்ணா அவர்களாலும்

படிப்பகம்

www.padippakam.com



வளர்த்தெடுக்கப்பட்டு நிலைநிறுத்தப் பட்டது. தி.மு.க. 1963-இல் திராவிட நாட்டுக் கொள்கையைக் கைவிட்டாலும் தமிழ்மொழிக்கு முதன்மை தேட முற்பட்டது. 1965-இல் இந்தி வல்லாண்மை எதிர்ப்புப் போராட்டம் ஒரு தமிழ்த் தேசியப் போராகும். தமிழ்த் தேசிய உணர்வின் வெற்றியால் தி.மு.க. 1967-இல் ஆட்சிக் கட்டிலேறியது. 1969-க்குப்பின் தி.மு.க. தடம் புரண்டது. கொள்கைக்குப் பகரமாகத் தேர்தல் வெற்றியே அதன் குறிக் கோளானது. 1971 முதல் 1983 வரை தமிழ்த் தேசியத்தின் உறக்கக் காலம் எனலாம். 1980வாக்கில் தமிழ் ஈழப்போர் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. திராவிட இயக்கத்தை மீறித் தமிழ் இயக்கங்கள் செயல்படத் தொடங்கின. மார்க்கசியம், பெரியாரியம், தனித்தமிழியம் இணைந்தன. திராவிட இயக்கங்கள் இந்தியத் தேசியத்தை ஏற்றுக்கொண்ட நிலையில், இவை தமிழ்த் தேசியம் பேசித் தமிழகத்துக்குத் தனியாட்சி உரிமை அல்லது தனித்தமிழ்நாடு கோரி வருகின்றன.

தனித்தமிழ்நாடு தனித்து இயங்கும் அளவிற்கு வளங்களும் வாய்ப்பும் பெற்றுள்ளது. ஆனால் அ்து ஒன்றே சிக்கல்களுக்குத் தீர்வு என்று கருத வேண்டியதில்லை. இந்திய அரசியலமைப்பு முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டு, உண்மையான கூட்டாட்சி (FEDERALISM) ஏற்படுத்தப்பட வேண்டும். ஒத்துழைப்பின் அடிப்படையிலான கூட்டாட்சி(CO-OPERATIVE FEDERALISM) ஏற்படுத்தப்பட்டு, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களும், நடுவண் அரசுக்கு தலையாய சில அதிகாரங்களும் அளிக்கப்பட வேண்டும். இந்தியாவில் உள்ள பல தேசிய இனங்களும் தங்கள் மொழி, பண்பாட்டின் தனித்தன்மை, இன அடையாளம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவிற்கு இந்திய அரசியல் அமைப்பு மாற்றி அமைக்கப்பட்டால், பிற மொழி - இனக் கூறுகள் திணிக்கப் படுவது நிறுத்தப்பட்டால், தனிநாடு கோரிக்கைகளை இந்தியா முழுவதுமே தவிர்க்க இயலும் — இந்தியத் தேசியத்தின் அகவை நூற்று இருபத்தைந்து ஆண்டுகளே, தமிழ்த் தேசியத்தின் அகவை ஈராயிரம் ஆண்டுகள். இந்தியத் தேசியக்காரர்கள் தமிழ்த் தேசியத்தைப் பிரிவினைக் கொள்கை என்றும், வட்டாரத் தேசியம் என்றும் அழைப்பதே தமிழ்த் தேசிய இன அடையாளத்தை மறுப்பதாகும். ஆகவே இந்தியா முழுவதும் போராடிவரும் பல தேசிய இனங்களை, முதலில் அவை தேசிய இனங்கள்தாம் என்ற உண்மையை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். பல தேசிய இனக் குடியரசுகள் கூடி ஏற்படுத்திய கூட்டாட்சியாக இந்தியா ஒரு புதிய அரசியலமைப்பின் மூலம் முழுவதும் மாற்றியமைக்கப்பட வேண்டும். ❒

படிப்பகம்

www.padippakam.com

## ...சான்றாளன்.

"இதுதான் இரட்டைமலை சீனிவாசன் அவர்களுடைய கொள்ளுப் பெயர்த்தியின் வீடு" — என்று நம்பி காட்டியதைப் பார்த்தபின் வருத்தமாகவே இருந்தது.

தமிழகச் சாதியக் குமுகத்தின் இழிவையும், இந்துப் பார்ப்பனியக் கட்டமைப்பையும் எதிர்த்துப் போராடிய அப் பெருமகனாரின் கொள்ளுப் பெயர்த்தி இல்லம் என்றெண்ணியபொழுது மகிழ்விருந்தாலும், அவ் வீட்டின் அமைப்பே என்னை வருந்த வைத்தது.

வீட்டின் நுழைவுக் கதவருகில் பளிங்குக் கல்லில் பிள்ளையார் உருவம், வீட்டின் உச்சியில் சிறிய அளவில் சாயிபாபாவின் சிலை.

சிறந்த அறிஞர்களின், போராளிகளின் வழிமுறையினர் எப்படி மாறிப் போய்விடுகின்றனர் என்றெண்ணியே எனக்கு அவ் வருத்தம்.

தாம் ஏற்றுக் கொள்ளுகிற கொள்கையிலும், நடைமுறையிலும் தம் வழித் தோன்றல்களை நெறிப் படுத்தாததாலேயே இத்தகைய போக்குகள் ஏற்படுகின்றன.

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்பது எவ்வளவு பெரிய உண்மையாகி விடுகின்றது.

— இப்படியாக எண்ணிக் கொண்டு வந்த எனக்கு நம்பி பேசிவந்தது காதில் விழவில்லை.

"என்ன சுடர் எதுவுமே சொல்லாமல் அமைதியாக நடக்கிறாய் ?"

— என்றவனிடம் நான் எண்ணி வந்ததையெல்லாம் சுருக்கமாகச் சொன்னேன்.

"ஆமாம்..... மிக உண்மைதான். தமிழ் தமிழ் என்று பேசிவந்த திராவிடக் கட்சியினரெல்லாம் தங்களுடைய குடும்பத்தினரைச் சிறிதும் அறிவுவழித் தெளிவு படுத்திடவில்லையே. அன்றைக்கு அன்பழகன், மதியழகன், நெடுஞ்செழியன் என்றெல்லாம் பெயர் வைத்துக் கொண்டவர்களின் பிள்ளைகளும், பெயரர்களும் என்ன பெயர் வைத்திருக்கின்றனர் பார்த்தாயா ? இரமேஷ், சுரேஷ், விஜய், அஜய்...... —எவ்வளவு பெரிய இழிவு இது....."

"சாதி ஒழிய மேடையில் முழங்கிய அவர்கள் தங்கள் குடும்பங்களின் திருமணங்களைச் சாதிவழியில் அன்றோ நடத்திக் கொள்கின்றனர். பகுத்தறிவாளர்கள் என்று பறை சாற்றிக்கொண்ட எத்தனையோ பேரின் குடும்பத் திருமணங்கள் முன்கூட்டியே பார்ப்பனனை வைத்து நடத்தப்பட்டுவிட்டுப் பின்னர் சீர்திருத்தத் திருமணமாகவாக அல்லவா வெளிக்காட்டி நடத்தப் பெறுகின்றன......

"அவ்வளவு ஏன்.... முத்தமிழ் முதல்வர் என்று முழங்கப்பெறும் கலைஞரின் பெயரர்கள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள். 'சன் டிவி' — என்று விடாப்பிடியாக அன்றோ வைத்துக் கொள்கின்றனர். சென்னைத் தொல்லைக்காட்சி 'தூர்தர்ஷன் கேந்திரா' — என்று சொல்வதற்கும் 'சன் டிவி' என்பதற்கும் என்ன வேறுபாடு...."

படிப்பகம்

www.padippakam.com



— இப்படியாக நெடுகப் பேசிவந்த நம்பி சற்று அமைதியானான்.

"ஆம் நம்பி. கொடுமைதான் அரசியல் களத்திற்குள் நுழைந்து பதவி நலன்களுக்கா:க இவர்கள் தங்கள் கொள்கையைக்கூட இழக்கக் கவலை கொள்ள வில்லை. 'பதவிக்காக எங்களின் இனமானத்தை இழக்கமாட்டோம்' என்றவர்கள் இன்றைக்குக் கொள்கை மானத்தையே அன்றோ இழந்து நிற்கின்றனர்"

"இல்லை சுடர் அவர்கள் மட்டுமில்லை..... அவர்களாவது பதவி நலனுக்காகக் கொள்கையைக் கைநெகிழ்த்தார்கள் — அவர்களைக் கடந்து புரட்சி பேசுகிறவர்கள், குமுக மாற்றம் குறித்துக் கொள்கை பேசுகிறவர்களில் எத்தனைப் பேர் தங்கள் குடும்பங்களிலிருந்து அந்தப் பணிகளைத் தொடங்குகிறார்கள் என்று எண்ணுகிறாய்?

சாதிஒழிப்பு சாதிஒழிப்பு என்று முன்னிலையில் முழங்கு கின்றவர்களில் எத்தனைப் பேர் தங்கள் குடும்பங்களில் சாதிமறுப்புத் திருமணத்தை ஏற்றிருக்கிறார்கள்?

பகுத்தறிவு.... மூடநம்பிக்கை என்று வெளியில் முழங்கிவிட்டு வீட்டுக்குள் 'கிருத்திகை, அட்டமி, நவமி, அமாவாசை, பௌர்ணமி — என்று நாள்நேரம் பார்த்துப் பட்டினியும் விருந்தும் உண்டு பூசி மெழுகிக் கொள்கின்றனர்.

தமிழ்வழிக் கல்வி..... தமிழ்வழிக் கல்வி என்று போராட்டத்தில் முதல் வரிசையில் நிற்கிற முனைவர்களின் வீட்டுப் பிள்ளைகளெல்லாம் ஆங்கில உயர்தரப் பள்ளிகளில்தாமே படிக்கின்றனர். அப்படிப் படிப்பது ஒருபக்கம் எனில் தமிழ்வழிப் பள்ளிகள் தூய்மையாய் உயர்தரத்தினவாய் இல்லை என்பதால் அப்படிப் படிக்க வைப்பதாக மறுபக்கத்தில் நயன்மையாகவேறு பேசிக் கொள்கின்றனர்.

எப்படி இருக்கிறது பார்த்தாயா சுடர் இவ்விழிநிலைகள்!"

"ஆம்..... நம்பி...... பார்ப்பனர்கள் அப்படி இருந்துவிடுவதில்லையே. அவர்களின் கொள்கையையும், நடைமுறையையும் வீட்டுக்குள்ளிருந்துதான் தொடங்குகிறார்கள். புறநிலையில் அவர்களிடம் சில மாற்றங்கள் தோற்றம் கொண்டாலும், அக அளவில் 'அவாள்'களின் ஆளுமைப் பண்பியலில் சிறிதும் அசைவு இருந்துவிடுவதில்லையே! ஆனால்,

நம்மவர்களோ, சீர்திருத்தத்தையும், குமுக மாற்றச் சிந்தனையையும் வீட்டுக்கு வெளியிலிருந்து தொடங்கி வெளியிலேயே நிறுத்திக் கொள்கின்றனர். வீட்டுக்குள்ளிருந்து தொடங்குவதில்லை. கொள்கையைக் காலணிபோல் வீட்டிற்கு வெளியே அன்றோ அவிழ்த்துவிட்டுவிடுகின்றனர்.

'நீதான் உன் பின்பற்றாளனுக்கு முதல் சான்றாளன்' என்கிற பழமொழிகளெல்லாம் ஏட்டுச் சுரைக்காயாக இருக்கிறவரை — குமுக மாற்றம் என்பதும் ஏட்டுச் சுரைக்காயாகத் தானே இருந்து கொண்டிருக்கும்.

— சுடர்

படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# பெயரிழந்த தமிழ் மக்கள்

— க. குழந்தைவேலன் —
(தொல்லியல் ஆய்வறிஞர்)

கணியத்திற்கு(சோதிடம்) அடிப்படையாக அமைந்திருப்பது வானவியலே. வானவியலிலும் தமிழர்கள் சிறந்து விளங்கினர் என்பதற்குக் கழக இலக்கியங்களும் அவற்றுக்கு முந்தைய தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களும் பிற்கால இலக்கியங்கள், மற்றும் பத்திப் பனுவல்களும் சான்று கூறுகின்றன. நாள்மீன் (நட்சத்திரம்) கோள்மீன்(கிரகம்)களின் வண்ணம், வடிவம், இயக்கம் பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் அறிந்திருந்தனர். மாந்தர்தம் பிறப்பின்பொழுது எந்த நாள்மீன் வானில் ஆட்சி செலுத்துகின்றதோ அந்த நாள்மீன் பிறந்தநாள் - வாணாள் மீனாகக் கொள்ளப்பட்டது. இதனை,

நின்று நிலைஇயர்நின் நாண்மீன் நில்லாது
படாஅச் செலிஇயர் நின்பகைவர் மீனே — புறம் : 24

எனவரும் புறப்பாட்டு அடிகளால் அறியலாம். நாள், கோள் மீன்களின் புடை பெயர்ச்சியால் உலகில் ஏற்படும் நன்மை தீமைகளையும் தெளிவாக அறிந்திருந்தனர் என்பதற்கு,

வசையில் புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்....
வான்பொய்ப்பினும் தான் பொய்யா.......காவிரி — பட்டினப்பாலை : 1–6
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும் — புறம் : 35
கோணிலை திரிந்து கோடை நீடினும் — மணி......பதிகம்

இவை போன்று வரும் பற்பல குறிப்புகளால் பண்டைத் தமிழரின் வானியலறிவையும் வானியல் சார்ந்த கணியவியலறிவையும் அறியலாம். இவற்றைக் கணித்துக் கூறும் வல்லுநர்கள் கணியர்கள் எனப் போற்றப்பட்டனர். சேரன் செங்குட்டுவன் வடதிசைப் படையெடுப்பின் காலத்தைக் கணியொருவன் கணித்துக் கூறியதைச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

அன்று தமிழர்கள் மண்ணில் இருந்து விண்ணில் அறிந்துணர்ந்ததை யெல்லாம், இன்று விண்ணிற்கே சென்று அறிந்து கூறும் அறிவியல் ஊழியில், தமிழர் மனத்தில் அறிவுக்குப் புறம்பான மூடக் கருத்துகள் ஆழ வேர்விட்டுள்ளன. மாந்தனை மற்றைய உயிர்களிடத்திலிருந்து உயர்த்திக் காட்டும் பகுத்தறிவு குன்றிவிட்டமையால்,

படிப்பகம்

www.padippakam.com



இடைக்காலத்தில் தம் வாழ்வை வளப்படுத்திக்கொள்ள வழி தேடியவர்கள் கணியம் என்ற பெயரால் கூறியவற்றையெல்லாம் மெய்ம்மை என்று நம்பினர். தமிழர்கள் பண்டைய கணிய அறிவையும், அறிவியல் முடிபுகளையும் புறந்தள்ளிப் புதியவாகப் புனைந்த கதைகளை நம்பினர். வாழ்வுக்காகக் கணியங் கூறுவாரின் கூற்றுகளையும், கதைகளையும் நம்பி, அவற்றிற்கு மாறாக எண்ணவும் பேசவும் அஞ்சினர். அச்சப் பெருநோய் அறிவுத் துளிரை வளர ஓட்டாது செய்துவிட்டது.

தமிழர்தம் அச்ச உணர்வை நன்குணர்ந்த பிழைப்புக் கணியர்க ளும் அவர்தம் அடிபோற்றிகளும் கணியத்தைத் தம் போக்கில் மென்மேலும் புனைந்துரைத்து அச்சத்தை வளர்த்தனர். இதில் கல்லா மக்களைவிடக் கற்றோராகக் கூறிக்கொள்ளும் பட்டப் புள்ளிகளே பற்றும், அச்சமும் மிகக் கொண்டனர். ‘கல்லாதவனுக்கு ஓரிடத்தில் கற்றவனுக்கு மூன்றிடத்தில்’ என்ற பழமொழிப்படி இவர்களது வெளிமனம் அறிவியலை நம்பினாலும் அகமனம் அறிவுக்கொவ்வாக் கணியக் கதைகளையே நம்பியது என்பதற்கு அவர்களின் செயற்பாடுகளே சான்று. எழுத்துக் கணியம், எண் கணியம், கைவரிக் கணியம் எனப் பல்வேறு கணியங்களைத் தேடித் திரிகின்றனர். அக்கணியர் கூற்றின் உண்மைத் தன்மையை எண்ணிப் பாராது அவர் கூறும் கழுவாய்க்கு(பரிகாரத்துக்கு)ச் செலவிடுவ திலேயே கவனமாக உள்ளனர்.

இன்றைய கணியர்கள் மக்கட் பெயரையும் விட்டு வைக்க வில்லை. கணியர்களும்(சோதிடர்கள்) ஐந்திற நூல்களும் (பஞ்சாங்கம்) ஒவ்வொரு நாள்மீனுக்கும்(நட்சத்திரத்துக்கும்) சில எழுத்துகளை அவற்றிற்குரிய பெயர் எழுத்துகளாகப் படைத்துக் கொண்டனர். குறிப்பிட்ட நாள்மீனில் பிறந்தவர்கள் அந்த நாண்மீனுக்குரிய எழுத்துகளுள் (நாம நட்சத்திர எழுத்துகள்) ஒன்றை முதல் எழுத்தாகக் கொண்ட பெயர்களைச் சூடிக்கொண்டால் நலம் பெறுவர். வளம்பெறுவர், வாணாள் சிறக்கப் பெறுவர் என்ற நம்பிக்கையை ஊட்டினர். ஆனால் வானியலையும், கணியத்தையும் நன்கறிந்த தமிழர்களில் எவரும் 18, 19-ஆம் நூற்றாண்டு தொடக்கம் வரை பிறந்த நாள்மீன் அடிப்படையில் தம் குழந்தைகட்குப் பெயர் வைத்ததாகச் சான்று இல்லை. தமிழ்க் கணியர் எவரும் நாள்மீனின் அடியாகப் பெயர் வைத்துக்கொண்டால்தான் வாணாள் சிறக்கும் என்றோ, வான்புகழ் பெறுவர் என்றோ, வளமுடன் வாழ்வர் என்றோ கூறியதற்கான சிறுகுறிப்புக்கூட நம் இலக்கியங்களில் இருப்பதாகத் தெரியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



பிழைப்புக் கணியர்கள் நாள்மீனுக்குரிய எழுத்துகளாகக் கூறியுள்ள நாள்மீன் எழுத்துகளில் (நட்சத்திர நாம எழுத்துகள்) பல வடமொழி எழுத்துகள். தமிழ் எழுத்துகளாகத் தோன்றுவனவற்றுள் தொண்ணூறு விழுக்காட்டிற்கு மேற்பட்டவை தமிழமொழியில் மொழிமுதல் எழுத்துகளாக வராதன. சில மொழிமுதல் எழுத்துக ளாக வந்தாலும் அவ்வெழுத்துகளை முதலாக உடைய மக்கட் பெயர் மிகமிகக் குறைவே. இவை முற்றிலும் வடமொழியை அடிப்படையாகக் கொண்டவை. இத்தகு வாணாள் மீன் எழுத்துக ளின் அடிப்படையில் பெயர் சூட்டினால் அவை பெரிதும் வட மொழிப் பெயர்களாகவே அமையும்.

நாள்மீன் அடிப்படையாகப் பெயர்சூட்டும் முறைகூட ஒரு வகையில் மறைமுகமாக வடமொழியைத் திணிக்கும் முயற்சியோ என ஐயுற வேண்டியுள்ளது. இவை எவற்றையும் உணராது கணியக் கண்ணாடி அணிந்து அச்சக்குதிரை ஏறிச் செல்லும் தமிழ் மக்கள் பலரும் நாள்மீன் அடிப்படையில் பெயர் வைத்தால் தம் பிள்ளைகள் நெடிய வாணாளோடு வளமான வாழ்வு வாழ்வர் என நம்பினர். அவ்வாறு வைக்கவில்லை எனில் தம்பிள்ளைகள் தீங்குறுவர் என அஞ்சினர். முயற்சியே வெற்றிக்கும் வளத்திற்கும் அடிப்படை என்பதை அறிந்தும், வணிகக் கணியர்களைத் தேடிச் சென்று கணியம் பார்த்துப் பெயர்க்குரிய மொழியையோ, பொருளையோ அறியாது அவர்கள் கூறும் எழுத்து, முதல் எழுத்தாக அமையுமாறு பெயர் வைத்தனர். இதனால் திருடனுக்கு அஞ்சித் தலையாரி வீட்டில் புகுந்த கதையாய்த் தமிழர்கள் கணியத்திற்கு அஞ்சி வடமொழிப் பெயரினராயினர். இது நாளும் பெருகி ஊறிப்போன வழக்காகி நிலைபெற்றுள்ளது.

தாம் சூடும் பெயர்களுக்குப் பொருள் அறியாமைக்கு எடுத்துக் காட்டாகச் சிலவற்றை இங்குச் சுட்டிக்காட்டுதல் நலம். தமிழகத்தில் வழங்கும் வடமொழிப் பெயர்களுள் நவநீதம், கோகுல், சியாமளா, சுப்பிரமணியன், தீனன் என்பன சில. நவநீதம் என்பதற்கு வெண்ணெய் என்றும், கோகுல் என்பதற்கு ஆயர்பாடி என்றும், சியாமளா என்பதற்குக் கருப்பாயி என்றும், தீனன் என்பதற்கு ஏழை அல்லது இரப்போன்(பிச்சைக்காரன்) என்றும், சுப்பிரமணியன் என்பதற்கு பிராமணனுக்கு நல்லவன் என்றும் பொருள். வெண்ணெய், ஆயர்பாடி, ஏழை, இரப்போன், பிராமணனுக்கு நல்லவன் என்று தமிழில் யாரேனும் பெயர் வைத்துக் கொள்ள விரும்புவார்களா? இவ்வாறு பொருள் அறியாது பல பெயர்களைத் தமிழர் சூடியுள்ளனர். வடமொழியில் உள்ள நல்ல பொருள்தரும் பெயர்களைக்கூட இவர்கள் பொருள் அறிந்து சூடிக்கொண்ட

படிப்பகம்

www.padippakam.com



தில்லை. பொருள் அறியாது, கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனப் பெயர் சூட்டிக்கொள்வது வழக்கமாகிவிட்டது.

நாள்மீன் அடிப்படையில் பெயர் சூட்டிக்கொண்டதால்தான் சிறக்க வாழ்ந்தார்கள் என்பதற்கோ, அவ்வாறு பெயர் சூட்டிக் கொள்ளாதவர்கள் சிறக்க வாழவில்லை என்பதற்கோ வரலாற்றில் எங்கும் சான்றுகள் இல்லை. நெடிய தமிழக வரலாற்றில் புகழ்பட வாழ்ந்தவர்கள் அல்லது செல்வத்தில் செழித்தவர்களுடைய பெயர்க ளுக்கும் அவர்கள் பிறந்த நாள்மீன் எழுத்துகளாகக் கூறப்பட்ட வற்றிற்கும் தொடர்பின்மையை நம்முடைய வரலாற்றுச் சான்றுகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. வரலாற்று மாந்தர்களின் வளமைக்கும் புகழுக்கும் அவர்தம் பெயர்கள் — நாள்மீன் எழுத்துகள் காரணமல்ல என்பதைப் பட்டியலிட்டால் அதுவே ஒரு பெரு நூலாக விரியும். எடுத்துக்காட்டாகச் சிலரைப் பற்றிக் காண்போம்.

தென்னக வரலாற்றில் – ஏன் இந்திய வரலாற்றிலேயே அசோகப் பெருமன்னனுக்குப் பின்னர் ஒரு பெருநிலப்பரப்பை – தெற்கில் ஈழம் முதல் வடக்கில் துங்கபத்திரை வரை – ஒரு குடைக் கீழ் ஆண்ட பெருமை படைத்தவன் சோழப் பேரரசனான முதலாம் இராசராசன். இவன் ஒப்பரிய பெருங்கற் கோயிலையும், கலைக் கோயில்களையும் படைத்த கலைவல்லான். ஆட்சியில், ஆள்வினை யில் எனப் பல துறைகளிலும் தமிழக வரலாற்றில் முன்னோடியாகத் திகழ்ந்தவன். சுருங்கக் கூறின் இவனுக்கிணை இவனே. இத்தகைய பெருமன்னனின் பிறந்த நாள்மீன் செக்கு(சதயம்). இம் மீனுக்குரிய எழுத்துகளாக (நட்சத்திர நாம எழுத்துகள்) கூறப்பட்டவை கோ, ஸ, ஸி, ஸு. இவனது இளமைப் பெயரான அருண்மொழி என்ற பெயரோ முடிசூட்டு(அபிசேக)ப் பெயரான இராசராசன் என்ற பெயரோ இவனது பிறந்த நாள்மீன் எழுத்துகள் ஒன்றில்கூடத் தொடங்கவில்லை. இவனது பெயரை, பெருமையை உலகம் உச்சி மேல் வைத்துக் கொண்டாடவில்லையா?

முதலாம் இராசராசனின் மகன் இராசேந்திர சோழன் தந்தைக்குச் சற்றும் சளைத்தவன் அல்லன். திசைகாட்டும் கருவியும், தொலைத்தொடர்புக் கருவியும் இல்லாக் காலத்தில் கங்கையும் கடாரமும் கைக்கொண்டு அரசு வீற்றிருந்த செம்பியர்கோன். தந்தைக் கிணையாகக் கங்கைகொண்ட சோழீச்சுரத்தைக் கட்டிய கலைமகன். இவனின் செயலும் புகழும் எழுதி மாளா. இவனது பிறந்த நாள்மீன் மூதிரை(திருவாதிரை). இதற்குரிய எழுத்துகளாகக் கூறப்பட்டுள்ளவை கு, க, ங, ச், சா என்பன. இராசேந்திரன்,

படிப்பகம்

www.padippakam.com



மதுராந்தகன் என்பன இவன் பெயர்கள். இப் பெயர்களின் முதலெழுத்துகளுக்கும் நாண்மீன் எழுத்துகளுக்கும் ஏதும் தொடர்பில்லை. இவனது புகழைக் கணியம் எள்ளின்மூக்கத் துணையும் தடுக்கவில்லை.

இவர்களைப் போன்ற எத்தனையோ வரலாற்று நாயகர்கள், சமயச் சான்றோர்கள், அரசியல், வாழ்வியல் எனப் பல துறைகளில் புகழ்பெற்ற பலரின் பிறந்த நாள்மீனுக்குரியனவாகச் சொல்லப் பட்ட எழுத்துகளுக்கும் அவர்களுடைய பெயர்களின் முதல் எழுத்துக்கும் தொடர்பில்லை என்பதைச் சில எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

இன்னும், உலகில் சிறக்க வாழ்ந்து புகழ் பெற்ற பலதுறைப் பெரியார்களுடைய நாண்மீன் எழுத்துகளுக்கும் அவர்தம் பெயர்களின் முதல் எழுத்துகளுக்கும் தொடர்பின்மையைப் பட்டியலிட்டுக் காட்ட இயலுமேனும் விரிவஞ்சி விடுக்கப்பட்டது.

இதுகாறும் கண்ட எடுத்துக்காட்டுகளால் பிறந்த நாள் மீனுக்கும் அவற்றிற்குரியனவாகக் குறிக்கப்பட்ட எழுத்துகளுக்கும் எவ்வகைத் தொடர்புமில்லை என்பதும் அவ்வெழுத்துகளை முதலெழுத்துகளாகக் கொண்ட பெயர்களைச் சூடிக் கொண்டவர்கள் வளமும் நலமும் பேரும் புகழும் பெறுவர் என்பதற்கும் சான்று இல்லை என்பதும் அதன்படி பெயர் வைக் காமையால் துன்பப்பட்டவர்கள் உண்டு என்பதற்கும் எவ்வகைச் சான்றும் இல்லை என்பதும் அறியப்படும். கணியத்தின் பேரால் இல்லாததும் பொல்லாதது மானவற்றைப் புனைந்துரைப்பதின்வழி மக்களுக்கு இயல்பாக உள்ள எதிர்கால வாழ்வு பற்றிய அச்சத்தைப் பெருக்கித் தமக்கு வேண்டிய அறுவடை நடத்திக் கொள்வார் செயலாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது. அச்சமும் பேதைமை யும் அறிவின் முதற்கேடு. இக் கேட்டுக்கு ஆளான மக்கள் தன்னுணர் விழந்து கயிற்றுப் பாவை போல இழுத்தவழிச் செல்வாராயினர்.

கணியத்தின் அறியா மயக்கால் தனிமாந்தக்கேடு மட்டுமன்றி மொழி இனக் கேடுகளும் நேர்ந்துள்ளன. இன அழிப்புக்கு முதற்படி மொழியழிப்பு. இந்த எழுத்துகளை முதல் எழுத்தாகக் கொண்டு தொடங்கப்படும் பெயர்கள் எண்பத்தைந்து விழுக்காட்டிற்கு மேல் வடமொழிப் பெயராகவே அமையும். அந்த வடமொழிப் பெயர்களையும் பொருளுணர்ந்து சூட்டிக்கொள்வோர் விரல்விட்டு எண்ணத் தக்க அளவினரே. இதனால் தமிழன் என்னும் பெயரளவிலான அடையாளத்தையும் தமிழர் இழந்துவிட்டனர் என்பதற்குத் தமிழ்மக்களின் இன்றைய பெயர்களே சான்றாக உள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



தமிழரின் பேதைமை கண்ட வடமொழியாளரும், வடமொழிப் பற்றாளரும் தமிழ்நாட்டு மக்களை வாழ்விக்கவே இத்தகைய பெயர்களை வைப்பதுபோலப் போக்குக் காட்டித் தமது குல நெறியை(குலதர்மத்தை) வளர்த்தெடுக்கும் தொழிலைச் செப்பமாகச் செய்கின்றனர். இதே நோக்கில் தமிழர்க்கு அறிவூட்டுவதாகப் போக்குக்காட்டிச் சில தாளிகைகளும் காப்பு – கங்கணம் கட்டிக் கொண்டு, இத் 'தொண்டில்' முனைப்புடன் செயல்படுகின்றன. எடுத்துக்காட்டாகத் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் தாம் செல்லும் இடங்களில் எல்லாம் தமிழ்க் குழந்தைகள் தமிழ்ப்பெயர் ஒன்றுகூட வராமல் காத்துள்ளமைக்குக் கீழ்காணும் செய்தி ஒரு சான்று. "பர்கூர் தொகுதியில் முதல்வர் செயலலிதா செவ்வாய்க் கிழமை மட்டும் 73 குழந்தைகளுக்குப் பெயர் சூட்டினார். ஜெயசிம்மன், ஜெயச்சந்திரன், ஜெயராமன், ஜெயதேவன், ஜெயதேவி, ஜெயகல்யாணி, ஜெயசீதா, ஜெயதுர்கா, ஜெயலட்சுமி போன்ற பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டினார்" (தினமணி மே 1, 1996).

திராவிடக் கட்சிகளில் ஒன்றாகக் கூறிக்கொண்டு பேரெழுச்சி பெற்று ஐந்தாண்டு காலம் தமிழகத்தை ஆண்ட (ஆரிய) திராவிடக் கட்சியான செயலலிதா கட்சி, தமிழாட்சி செய்வதாக மார்தட்டிக் கொண்டு மக்களை மயங்கச் செய்து ஆரியப்படுத்தியதற்குப் பல எடுத்துக்காட்டுகள் காட்டலாம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தம்மைச் சூழ்ந்த ஆரிய மாயையின் எச்சமே இது என்பதை நம்மில் எத்தனைப் பேர் உணர்ந்தோம்.

தமிழகத்து நாளேடுகளுள் பல, தமிழ்நலம் பேணுதல் தம் கொள்கை அன்று என உறுதி எடுத்துக்கொண்டவை. சில தமிழோடிருந்து தமிழை அழிக்கவேண்டும் என உறுதி பூண்டவை.

அத்தகைய நாளேடுகளில் ஒன்று தமிழகத்துப் பெற்றோர் தம் பிள்ளைகளுக்குப் பெயர் கிடைக்காது தத்தளிப்பது போலவும்,

**தமிழ்வழிக் கல்விக் கழகம்!**

தமிழ்வழி மழலையர் பள்ளியைத் தமிழகத்தில் முதன்முதலில் தொடங்கிய திருவாட்டி இறை. பொற்கொடி அவர்களை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு இக்கழகம் அமைந்துள்ளது. இதில் திருவான்மியூர் திருவள்ளுவர் மழலையர் பள்ளி, குன்றத்தூர் பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளி, திருவொற்றியூர் பாவலரேறு மழலையர் பள்ளி ஆகியன இணைந்துள்ளன. வரும் கல்வி ஆண்டில் சென்னைக்கு அடுத்த பள்ளிக்கரணையிலும் பெருங்குடியிலும் இரு தமிழ்வழிப் பள்ளிகள் இக்கழகத்துடன் இணைந்து தொடங்கப் பெற விருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



அவர்களுக்குத் தொண்டு செய்வதே தமது திருநோக்கம் என்பது போலவும் முன் வந்து "என்ன பெயர் சூட்டலாம்" எனத் தனது துணை ஏடான கதை மலரில் கிழமைதோறும் சில பக்கங்களை இதறகென ஒதுக்கி ஒரு பட்டியலை வெளியிட்டு வந்தது. ஒவ்வொரு கிழமையும் அவ்வக் கிழமைகளில் பிறந்தவர்களுக்குக் கணிய அடிப்படையில் அமைக்கப்பட்ட பெயர்களாம் அவை. இப் பெயர்களில் எண்பது விழுக்காட்டுக்கு மேற்பட்ட பெயர்கள் தமிழ்ப் பெயர்களே அல்ல என்பதை நாம் அறியோம். எனினும் அவர்கள் அறிந்தே வைத்தவை இவை. மீதமுள்ளவை தமது கரவெண்ணம் வெளிப்படாதிருக்கச் சேர்த்துக் கொள்ளப்பட்ட இக்கால வழக்குத் தமிழ்ப் பெயர்கள். இவற்றை 1993, 1994 ஆண்டுகளில் வந்த தின மலரின் கதைமலர்களில் காணலாம். இதுபோன்ற பல கீழறுப்பு வேலைகளுக்கு உடந்தையாக நிற்பதற்குத் தமிழர்களின் தந்நிலை அறியாமையும், அச்சமுமே காரணம்.

அறிவியல் ஊழியான இவ்விருபதாம் நூற்றாண்டில் பகுத்தறியாது கண்டதே காட்சி கொண்டதே கோலமென இராமல் சிந்தனைத் தமிழர்கள் உருவாக வேண்டும். நாள்மீனுக்கும், பெயருக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. நாள் என்செயும், கோள் என்செயும் என்பது ஆன்றோர் மொழி உணர்த்தும் உண்மை. நம் அறிவும், உண்மை உழைப்புமே நம்மை உயர்த்தவல்லன என்பதை உணர்தல் வேண்டும். முதற்கட்டமாக நாண்மீன் பெயரால் தமிழ்ப் பெயர் இழப்பைத் துடைப்பது தமிழ் இன தமிழ் நல முன்னேற்றப் பெருவழியின் முதல்படி என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

(இனி வரும் கட்டுரைகளில் சமயம், தாளிகை, திரை, சின்ன திரைகளால் ஏற்பட்ட, ஏற்படும் தமிழ்ப் பெயர் இழப்பு வரலாறும் தமிழர்க்கான கடைத்தேற்றமும் ஆராயப்படும்). ❑

## பாவலரேறு ஐயா அவர்களின் 67-ஆம் பிறந்தநாள் விழா

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை, தொழிற் பேட்டையில் இயங்கிவரும் பாவேந்தர் தமிழ்மன்றம் சார்பில் கும்பம் 26 அன்று (10.3.'99) பாவலரேறு ஐயா அவர்களின் 67-ஆம் பிறந்தநாளை முன்னிட்டுத் தொழிற்பேட்டைப் பேருந்து நிறுத்தத்தில் பாவலரேறு ஐயா அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி திரு. சி. தமிழன்பன் தலைமையில் நடைபெற்றது. செயலர் தமிழ்க் கனல், துரையரசு, வீராசாமி, வீரையா, சத்தியமூர்த்தி, இரா. சத்தியமூர்த்தி, பழ. அம்பிகாபதி, நரசிம்மன், மு. சுப்பிரமணி, சு. செல்வி மனோன்மணி மற்றும் பலர் கலந்துகொண்டு தமிழ் எழுச்சி முழக்கங்களை முழக்கினர்.

படிப்பகம்

www.padippakam.com

# யார் — எவர்?

— குரிசில்

தூயதமிழ்க் காவலர் கு.மு. அண்ணல்தங்கோ அவர்கள், மறைத்திரு. மறைமலையடிகளார் வழியைக் கடைப்பிடித்து நிறைதமிழ்த் தொண்டாற்றிய சிறப்புக்குரியவர். விடுதலைப் போராட்ட வீரரும் ஈகியுமான இவர், இந்தியத் தேசியப் பேராயத்திலும், தென்னிந்திய மக்கள் நலவுரிமைக் கழகம் என்ற நயன்மை(நீதி)க் கட்சியிலும் ஈடுபட்டுப் பொறுப்பேற்றுச் செயலாற்றியவர்.

நயன்மைக் கட்சியைத் 'திராவிடர் கழகம்' எனப் பெயர் மாற்றம் செய்தபோது அதனை எதிர்த்து, அதற்குத் 'தமிழர் கழகம்' என்றே பெயர்சூட்ட வேண்டும் என்று குரல்கொடுத்த பெருமை அவருக்கு உண்டு.

'உலகத் தமிழ்மக்கள் தற்காப்புப் பேரவை' நிறுவியும், தமிழர் திருநாள் விழாவைப் பல்லாண்டுக் காலம் தொடர்ந்து நடத்தியும், 'தமிழ்நாடு—பெயர் மாற்ற மாநாடு', 'தமிழக எல்லை காப்பு மாநாடு' முதலானவற்றை நடத்தியும் 'தமிழ்நிலம்' என்னுங் கிழமை இதழை வெளியிட்டும் அவர் மேற்கொண்ட 'நன்முயற்சிகள் பலப் பல.

சுவாமிநாதன் என்னும் வடமொழிப் பெயரைத் தமிழில் அண்ணல்தங்கோ என மாற்றிக்கொண்ட அவர், தம் மக்களுக் கெல்லாம் நற்றமிழ்ப் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்ததோடல்லாமல் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' எனக்கொண்டு தம்மோடு தொடர்புடையவர்கள் பெயர்களை யெல்லாம் மொழி பெயர்ப்பாகவோ புத்தாக்கமாகவோ தமிழ்ப்படுத்தி வழங்கினார். தமிழ், சமயம், குமுகாயம், அரசியல் முதலான பல்வேறு துறைக ளிலும் புகழ்பெற்ற பலருடைய பெயர்கள் அண்ணல்தங்கோவால் தமிழாக்கம் பெற்றன. ஆகவே, திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள், அண்ணல்தங்கோவைப் 'பெயர்மாற்றத் தந்தை' என்றே குறிப்பிடுகிறார்.

அண்ணல்தங்கோவால் தமிழ்ப்பெயர் சூட்டப்பெற்றவர்களில் சிலர் தம்மளவில் அப்பெயர்களை வழங்காவிட்டாலும் அவர் விட்டு விடுவதில்லை. எப்போதும் எவ்விடத்தும் எழுத்திலும் பேச்சிலும் அத் தமிழ்ப் பெயர்களையே அவர் வழங்குவார்.

1. அரசியல்மணி 2. அருட்செல்வம் 3. அருளின்பக் கடலார்
4. அறச்செல்வி 5. உயிரின்பன் 6. உலகண்ணல்
7. காரழகனார் 8. குழற்கோமான் 9. நிலவழகனார்
10. மன்பதைக்கன்பன்.

— இத் தமிழ்ப் பெயர்களுக்கு உரியவர்கள் யார் தெரியுமா?

காண்க : பக். 48

படிப்பகம்

www.padippakam.com

## எதற்காக.......?

(திரைப்படம் பார்த்துப பார்த்து வீணாய்க் கெட்டுப் போகாதே என்று தந்தை சொல்வதை எதிர்த்து—'எதற்கு?'—என்று கேட்கத் தெரிந்த தம்பிக்கு, இக் குமுகத்தில் நடக்கிற ஒவ்வொரு நிகழ்வையும் — ஏன் இப்படி நடக்கிறது, எதற்காக? என்று கேள்வி எழுப்பத் தெரியவில்லை. அப்படிக் கேள்வி கேட்பதில் அக்கறை இல்லை.

அப்படியான அக்கறையூட்டத்திற்காக — நாமே இக் குமுகத்தின் மீதான ஆளுமை குறித்து விளக்கப்படுத்துதல் தேவையாகின்றது.

இப் பகுதியில் தொடர்ந்து அத்தகைய செய்திகளைத் தர இருக்கிறோம்)

# இலாகூர் செல்கையும், தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் நிகழ்வும்.

அண்மையில் இந்த இரண்டு நிகழ்வுகளும் மிகப்பெரும் விளம்பரங்களுக்கிடையில் நடந்து முடிந்தன.

ஒன்று — இந்தியாவிற்குள் வாழும் மக்களிடமெல்லாம் இந்திய ஆளுமையர்களால் பகைமை நாடாகக் காட்டப்பட்டுவரும் பாக்கித்தானுக்குப் பேருந்துவழிச் சென்ற நிகழ்வு.

மற்றொன்று — தெற்காசிய (ஏழு) நாடுகளில் கூட்டமைப்புக் கூட்டத்தை இந்தியாவிற்கு வெற்றிமுகமாகக் கூட்டி முடித்தது.

இந்த இரண்டு செய்திகளும் எந்த அளவு வரலாற்று முகாமை கொண்டன என இந்த அரசு பறைசாற்றிக் கொள்கிறதோ அதைவிட மிக முகாமையானது, அச் செயல்கள் எதற்காக நடத்தப் பெற்றன என்பதன் உண்மை நிலையை நாம் அறிந்துகொள்வது.

இன்றைய அமெரிக்க வல்லரசோடு பொருளுருவாக்கத்தில் பகைமை நிலையில் வலுப்பெற்று வந்திருக்கிற பெரும் நாடு சீனா. சீனாவின் பொருட் சந்தை உலக அளவில் விரிவாகிக் கொண்டு வருவதை முடக்க வேண்டுவது அமெரிக்காவின் திட்டமிட்ட வல்லாளுமை எண்ணம்.

அதேபோல் அமெரிக்காவை எதிர்க்கிற வகையில் படையியல் நிலையில் சீனா வளர்வதைக் கட்டுப்படுத்தி எதிர்க்கிற வகையில் அமெரிக்கா தன்னை வலுப்படுத்திக் கொள்கிறது.

எனவே, அது சீனாவின் அண்டைநாடுகளின் ஆதரவைப் பெரிதும் அடித்தளமிட்டு நிலைப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

சீனாவின் அண்டை நாடுகள் தங்களுக்கிடையே சில பழைமை நிலைப்பட்ட பகைமை இருந்தாலும் அவற்றையெல்லாம் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, பொருளியல் விற்பனைச் சந்தை வழிப்பட்ட அரசுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இக்கால் அழுத்தமானதாகிவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com



எனவே, பழைமை நிலை—மதவியல் நிலையில் முரண்பட்டதாய் இருக்கிற இரு பெரு ஆளுமை நாடுகளான இந்தியாவையும், பாக்கித்தானையும் பொருளியல்வழிப்பட்ட வகையில் சந்தையடிப்படையில் ஒருங்கிணைக்கிற முயற்சி அமெரிக்காவுக்குத் தேவைப்படுகிறது.

எனவே இருநாடுகளில் இவ்வகைத் தன்மை அளவோடான இணைப்பு முயற்சியைச் சில மாதங்களுக்கு முன்பாகவே அமெரிக்கா செய்து அம்முயற்சியின் நோக்கில் வெற்றியும் அடைந்தது.

அவ் வெற்றியின் வெளிப்பூச்சு நிகழ்வே இலாகூர் செல்கை.

அச் செல்கையின்வழி ஓர் அரசியல் உறவு இருப்பதாகக் காட்டப்பட்ட நிலையைத் தொடர்ந்து, தன் உறவின் அடிப்படையில் காசுமீரச் சிக்கல்குறித்தும் பேசி உலக அளவில் ஒரு முடிவுக்கு வரலாம் எனப் பாக்கித்தான் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பில் பேச முனைந்தபோது—அதை முற்றிலுமாக மறுத்துவிட்டது இந்தியா.

காசுமீரத்தின் ஒரே நிலப் பகுதியே இந்தியாவுடனும், பாக்கித்தானுடனும் இருப்பதாக இரு நாட்டரசுகளும் இன்றைக்கும் தம் நில அளவில் வரைபடம் போட்டுக் கொள்ளுகின்றன.

இந்திய விடுதலையின்போது தான் தனித்த நாடாகவே இருப்பதான ஒப்புதலோடு இருந்த காசுமீரத்தை ஏமாற்றி — அந் நாட்டு மன்னனை அடிபணிய வைத்து இந்தியாவுடன் இணைவதாக ஒரு போலி உடன்பாட்டை இந்திய அரசு செய்தது.

இதை ஒப்பாத காசுமீர மக்களைச் சரிசெய்வதற்காக மக்களின் பெரும்பான்மை அடிப்படையில் — கணக்கெடுப்பு நடத்தி முடிவு செய்வதாக உறுதியளிக்கப்பட்டது.

மக்கள் குடிமதிப்பு அடிப்படையில் இதைத் தீர்வுக்குக் கொண்டுவருவதாகக் கூறிய நேருவின் உறுதிமொழி — பொய் மொழியாகவே போனது. அது மட்டுமல்லாமல் — இன்றைக்குக் காசுமீரம் தன் இந்திய(ப்பார்ப்பனிய)க் கட்டமைப்புக்குள் அடங்காமல் தீவிர வன்முறை நாடாக வளர்ந்துவிட்டதாகவும் அதை ஒடுக்குவதோடு, காசுமீரத்திற்கான தனி உரிமைச் சட்டங்களையும் நீக்கவேண்டும் என்றும் பூணூல் வெறித்தனமாய்க் கொக்கரிக்கிறது இந்தியா.

இதேவகை ஆளுமையில் பாக்கித்தானிய அரசும் பிடுங்கிய வரை ஊதியம் என்று காசுமீரத்தைக் கவரப் பார்க்கிறது.

சொந்த நிலத்தை இருபெரும் வல்லூறுகளிடம் விட்டுவிட்டு ஏதிலியர்களாய் நைந்துகிடக்கிறன்றனர் காசுமீர மக்கள்.

ஆக — இவ்வாளுமை அரசுகள் வெளிச் சொல்லுகிற ஒற்றுமை என்பதும், பகைமை என்பதும் கொள்ளைக்காகவும் ஆளுமைப் பங்கிற்காகவுமே அல்லாமல் அது மக்களின் ஒற்றுமைக்காகவோ, உறவுக்காகவோ இல்லை என்பதே நாம் இந்நிகழ்வுகளில் விளங்கிக் கொள்ள வேண்டுவது. ○

படிப்பகம்

www.padippakam.com

இலக்கியச் செய்தி

# ஓவாவுரை

— குரிசில் —

மறவனப்புகள் (இதிகாசங்கள்) எனப்படும் இராமாயண பாரதக் கதைகளும், அவற்றின் பல்வேறு கிளைக் கதைகளும், இன்னோரன்ன தொன்ம(புராண)க் கதைகள் பலவும் இன்று தொலைக்காட்சி, திரைப்படங்கள் வாயிலாகப் பரப்பப்படுவதைக் காண்கிறோம். விழா நிகழ்ச்சிகள், பாடநூல்கள், பட்டிமன்றங்கள், பல்வகை இசையரங்குகள், சொற்பொழிவுகள், நாட்டியங்கள், நாடகங்கள், கதைப் பொழுதுகள் முதலான பலப்பல வடிவங்களிலும் அவை மக்களிடையே சுற்றிச் சுழலுகின்றன; புதுப் புது உத்திகள் மூலம் காலந்தொறும் அவை புதுப்பிக்கப்படுகின்றன.

இக் கதைகளிலெல்லாம் போர்க்களங்களே உச்சக்கட்டக் காட்சிகளாகப் பலபட விரித்துப் பேசப்படுகின்றன. தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையிலான போர் பதினெட்டு யாண்டுகளும் இராமனும் இராவணனும் எதிர்ந்த போர் பதினெட்டு மாதங்களும், பாண்டவரும் கவுரவரும் மலைந்த போர் பதினெட்டு நாள்களும் நடைபெற்றனவெனக் கூறப்படுகின்றது.

இனிச் சிலப்பதிகாரத்தில், சேரன் செங்குட்டுவன் வடபுலத்துக் கனகவிசயர் முதலான ஆரிய மன்னர்கள்மீது தொடுத்த போர் பதினெட்டு நாழிகையில் முடிவுற்றது என்பதைப் பெருமிதந் தோன்றக் கூறுமிடத்துப் பதினெட்டு எனும் எண்ணொடு தொடர்புற்ற யாண்டு, மாதம், நாள் என நடந்த போர்கள் பற்றிய செய்தி குறிப்பிடப்படுகின்றது.

.... ..... தென்றமிழ் ஆற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரைச்
செயிர்த்தொழில் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த்தொகை உண்ட ஒன்பதிற்று இரட்டியென்று
யாண்டும் மதியும் நாளுங் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலங் கூட்டி எண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கின்
ஒருபகல் எல்லை உயிர்த்தொகை உண்ட
செங்குட்டு வன் .... ....

என்பது இளங்கோவடிகளார் கூற்று. இப்பகுதிக்கு உரையெழுதும் போது அருஞ்சொல் உரையாசிரியர்

"தேவாசுர யுத்தம் பதினெட் டாண்டிலும் இராம இராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும் பாண்டவ துரியோதன யுத்தம் பதினெட்டு நாளிலும் செங்குட்டுவனும் கனக விசயரும் செய்த யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தனவென்று எண்ண...."

என்று விளக்குகிறார்.

இவ்வாறு போர்கள் முடிவுற்றாலும் மேற்கூறிய முப்போர் பற்றிய பேச்சு முடிவுக்கு வந்தபாடில்லை.

படிப்பகம்

www.padippakam.com



சீவக சிந்தாமணியிலும் இப் போர்கள் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

'எண்கொண்ட ஞாட்பு' **(2353)**

எனத் திருத்தக்கத்தேவர் பொதுப் படக் கூறினும், சிந்தாமணியின் உரையாசிரியரான நச்சினார்க் கினியர்

"தேவாசுர ராமாயண மாபாரதமென்கின்ற போர்"

என்று முப்போர் பற்றியே கூறுகிறார்.

நச்சினார்க்கினியர் செங்குட்டுவன் போர்ச் செய்தியை அறியாதவரல்லர். ஆயினும் அவர் அதனைத் தவிர்த்துக் கூறியது, அது மாந்தவியல் தொடர்புடையதும் முன்னைய மூன்றும் தேவியல் தொடர்புடையனவுமாகும் என்பதனால் மட்டுமன்று. அவர் காலத்துக்கு முந்திய நிலையிலும் மேற்படி முப்போர் பற்றியே புலவர்களிடையிலும் பேசப்பட்டது; பொதுமக்களிடையிலும் பரப்பப்பட்டது என்பதும் அதற்குக் கரணியம் எனலாம்.

தேவாசுரப் போர், இராம இராவணப் போர், பாண்டவர் கவுரவர் போர் ஆகியன பற்றிய இராமாயண, மாபாரத, தொன்மக் கதைகளே ஓயாத ஒழியாத பேச்சாக யாண்டும் பரப்பப்படுவது கண்டு அக் காலத்திலுஞ் சிலர் சலிப்புற்று முகஞ் சுளித்திருக்கக் கூடும். கலிங்கத்துப் பரணியில் இதுபற்றிய மெல்லிய குறிப்பு காணப்படுகிறது.

களவழி பாடுவதில் வல்லவரும், 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என்று பாராட்டப் பெறுபவருமான சயங்கொண்டார் மேற்படி முப்போர் பற்றிய பேச்சுத் தொடருக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கருதினார் போலும்!

சோழவேந்தனின் தளபதியான கருணாகரத் தொண்டமான கலிங்க நாட்டின்மீது படைநடத்திச் சென்று, ஆயிரத்துக்கும் மேற்பட்ட யானைகள் பங்கேற்ற எதிரிப் படையை வென்று வாகை சூடிய போர்க்களம் பற்றிக் கூறுமிடத்து

**தேவாசுர ராமாயண மாபாரதம் உளவென்(ற)**
**ஓவாவுரை ஓயும்படி உளதப்பொரு களமே!**

என்று பாடுகிறார் சயங்கொண்டார்.

'ஓவாவுரை' என்பதில் முப்போர் பற்றித் தொடர்ந்து வரும் பேச்சின்மீதான புலவரின் சலிப்புணர்ச்சியும், 'ஓயும்படி' என்பதில் கலிங்கப்போர் அப் பேச்சினை ஓயச் செய்தமை பற்றிய அவர்தங் களிப்புணர்ச்சியும் இழையோடுதல் காண்க!

ஆயினும், இராமாயண மாபாரதக் கதைகள் இன்றளவும் ஓவாவுரையாகவும் ஒழியாவுரையாகவும் தொடர்ந்து கொண்டு தாமே இருக்கின்றன! ■

படிப்பகம்

www.padippakam.com

# செய்திகள்

## உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை விழா:

அமெரிக்கா – சிகாகோவின் 'உலகத் தமிழ்மொழி அறக் கட்டளையின் சார்பில், திருக்குறள் இசைமலர் (காமத்துப்பால் — அகத்துறைப் பாடல்கள் — இரு குறுந்தகடுகளும் இரு நூல்களுங் கொண்ட இணைப்பு) வெளியீட்டு விழா, தி.பி. 2029 சிலை 26 ஞாயிறு (10.1.'99) மாலை, சென்னை - அடையாற்றிலுள்ள நடுவண் தோல்பொருள் ஆய்வக அரங்கில், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பி.டி. மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

முனைவர் தமிழப்பன் வரவேற்புரை யாற்றினார். திரு. அழகப்பா இராம்மோகன் உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை பற்றிய அறிமுகவுரை நிகழ்த்தினார். தமிழ்ப்புலமை தொண்டு ஆகிய வற்றைப் பாராட்டும் வகையில் தமிழகப் புலவர் குழுவுக்கும் தென்மொழி அவையம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. தென்மொழிய அவையத்துக் கான நினைவுப் பரிசைத் திரு. தாமரை பெருஞ்சித்திரனார் சார்பில் புலவர் இறைக்குருவனார் பெற்றுக்கொண்டார்.

## 'நாச்சியார் இல்லம்' — புதுமனை புகுவிழா:

தென்மொழி அன்பர் தில்லி திரு. மு.நா.பா. தமிழ்வாணன் — த. தமிழ்ச்செல்வி இணையர், திருக்குற்றாலத்தை யடுத்த மேலகரத்தில் எழுப்பியுள்ள 'நாச்சியார் இல்லம்' — புதுமனை புகுவிழா, தி.பி. 2030 சுறவம் 13 அன்று (27.1.'99) நடைபெற்றது. உலகத் தமிழ்க் கழகப் பொதுச் செயலாளர் குடந்தை. கதிர். தமிழ்வாணன் விழா நிகழ்ச்சிகளை நடத்தி வைத்தார். நாச்சியார் இல்லம் நற்றமிழ் வளமனையாய்ச் சிறப்புறத் தென்மொழியின் நல்வாழ்த்துகள்!

## மேடவாக்கம் தமிழ்மன்றத் தொடக்கவிழா:

சென்னை — மேடவாக்கம் தமிழ்மன்றத் தொடக்கவிழா, தி.பி. 2030 சுறவம் 23 அன்று (6.2.'99) மாலை, மேடவாக்கம் பேருந்து நிலையம் — பாவலரேறு திடலில், திரு. கி. குணத்தொகையன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. மாந்தநேயன் (த.ஓ.வி.இ.) வரவேற்புரையாற்றினார்.

தமிழ் மன்றத்தைத் தொடங்கிவைத்து முனைவர் சாலினி இளந்திரையனார் அவர்கள் உரையாற்றினார். ஊராட்சித் தலைவர் திரு. சி. அரிதாசு, ஒன்றியக்குழு உறுப்பினர் திரு. த. ஏழுமலை

படிப்பகம்

www.padippakam.com



(பா.ம.க.), திரு. என்றிதசரதன் (தி.மு.க.), திரு. எழில்இளங்கோவன் (ஆதித் தமிழர் பேரவை) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

திரு. தாமரைபெருஞ்சித்திரனார், புலவர் இறைக்குருவனார், சொல்லாய்வு அறிஞர் ப. அருளியார், முனைவர் அரு. கோபாலன், பாவலர் இன்குலாபு, திரு. கே.இ. பாற்கரன், திரு. இறை. பொற்கொடி ஆகியோர் சிறப்புரையாற்றினர். திரு. செந்தாமரைக் கண்ணன் (தமிழ் தமிழர் பேரவை) நன்றி நவின்றார்.

பாவலரேறு ஐயா அவர்கள் நிலைகொண்டுள்ள மேடவாக்கத்தில் கட்சி முதலிய சார்புகள் இன்றித் தொடங்கப் பட்டுள்ள இம்மன்றத்திற்குத் தமிழ் இனவுணர்வுள்ள அனைத்துக் கட்சியினரும் பல்வேறு இயக்கத்தவர்களும் பொதுமக்களும் ஆதரவு நல்கியுள்ளனர்.

தென்மொழியன்பர்கள் திரு. சடகோபன், திரு. க. குழந்தை வேலன், மாக்குமரன் முதலானோரும் திரு. மணிமாறன், பன்னீர்ச்செல்வம் உள்ளிட்ட த.நா.மா.இலெ.க. அன்பர்களும் பிறரும் கூட்டத்துக்கு வருகை தந்திருந்தனர்.

**தமிழ்ப் பேரவை விழா:**

சென்னை – ஆவடியில், தி.பி. 2030 கும்பம் 6 அன்று (18.02.'99) மாலை தமிழ்ப் பேரவையின் சார்பில் மொழிஞாயிறு பாவாணரின் பிறந்த நாள் மற்றும் பேரவையின் ஐந்தாம் ஆண்டுத் தொடக்க விழா பேரவைத் தலைவர் முனைவர் ச. முருகானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேரவைச் செயலர் திரு. செ.ப. முத் தமிழ்மணி வரவேற்புரையாற்றினார். ஆவடி இரா. மனோகரன் (தி.க.), சேக்காடு ஐ. மனோகரன் (பா.ம.க.) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் 'ஈழ மக்களும் அவர்தம் சிக்கலும்' என்னும் பொருள் பற்றியும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் தூயதமிழ்ச் சொல்லாக்க அகரமுதலிகள் துறைத் தலைவர் சொல்லாய்வு அறிஞர் அருளியார் அவர்கள் 'தமிழ்வழிக் கல்வியும் தமிழ் மானமும்' என்னும் பொருள் பற்றியும் சிறப்புற நிகழ்த்தினர். பேரவைத் துணைத் தலைவர் திரு. மறை. திரு. தாயுமானவன் நன்றி நவின்றார். முன்னதாகத் திரு. தணிகைப் பன்னீர்ச்செல்வம் குழுவினரின் இன எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

கூட்டத்தில் பேரவையின் சார்பில் 26 தமிழர் உயிர்காப்புப் பொருட்கொடையாக உரு. 14,000 (பதிநான்காயிரம்) திரு. பழ. நெடுமாறன் அவர்களிடம் வழங்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



**கனிமொழி – வெற்றிக்குமரன்(செயக்குமார்) திருமணம் :**

தென்மொழிக் கொள்கைச் சுற்றத்தைச் சேர்ந்த திருப்பூர்த் தென்மொழி ப. துரையரசன் ஈசுவரி ஆகியோர் மகள் திருநிறை செல்வி கனிமொழிக்கும் உடுமலை கிருட்டிணாபுரம் திரு. ச.நா. வேலுச்சாமி வள்ளியம்மாள் ஆகியோர் மகன் திருநிறை செல்வன் செயக்குமார் என்ற வெற்றிக்குமரனுக்கும் தி.பி. 2030 கும்பம் 9 அன்று (21.2.'99) திருப்பூரில் திருமணம் நடைபெற்றது.

திருமண நிகழ்ச்சியைத் திருக்குறள்மணி இறைக்குருவனார் தலைமையில் சொல்லாய்வு அறிஞர் அருளியார் நடத்திவைத்தார். முன்னதாகக் கோவை. திரு. இரணியன் வரவேற்புரை நிகழ்த்தினார். மணமக்களை வாழ்த்தி, முனைவர் சிற்பி. பாலசுப்பிரமணியம், பதினாறு கவனகர் திருக்குறள் இரா. கனகசுப்புரத்தினம், திரு. சி.பி. பாலசுப்பிரமணியம், திரு. கனி.வே. சீனிவாசனார், திரு. க.வே. பொன்னையன்(த.நா.மா.இலெ.க.) ஆகியோர் உரையாற்றினர்.

**தமிழர் உறவின் முறை**

குடந்தையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர் உறவின் முறைக் கூட்டம் – 2030 கும்பம் 29 அன்று (13.3.'99) நடைபெற்றது. இக் கூட்டத்தில் பல செயல் தீர்மானங்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் சில:

- சமற்கிருத ஆண்டாக அறிவித்து மக்கள் பணத்தைப் பாழடிக்கும் இந்திய அரசையும் பாராமுகமாக இருந்து மறை முகமாக ஒத்துழைக்கும் தமிழக அரசையும் கண்டித்தும் தமிழைச் செம்மொழியாக அறிவிக்கவும் கோருதல்,
- சாதி மறுப்புத் திருமணம் புரிந்தோர் அமைப்பாகத் திரளும் போது தம்மைச் 'சாதியற்றவர்' என்று மட்டுமன்றி 'தமிழர்' என்று தமிழ்த் தேசிய அடையாளத்தோடு இணைத்துக் கொள்ள வேண்டும்.


**தென்மொழி**

(தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்)

**கட்டண விளக்கம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் (மலர் உட்பட) | உரு. 70.00 |
| வாழ்நாள் கட்டணம் | உரு. 700.00 |
| தனி இதழ் | உரு. 5.00 |

**வெளிநாட்டுக் கட்டணம்**

| | |
|---|---|
| வானூர்தி வழி ஆண்டுக் கட்டணம் | உரு. 400.00 |
| கப்பல் வழி ஆண்டுக் கட்டணம் | உரு. 300.00 |


படிப்பகம்

www.padippakam.com

# நூல் அறிமுகம்

## தீர்ப்பு.

ஆசிரியர்:
மாரி. அறவாழி

வெளியீடு:
அறவாழி பதிப்பகம்,
எண் : 1, மூன்றாவது தெரு,
இலக்குமிபுரம் விரிவு - 2,
தாம்பரம், சென்னை - 45,

விலை : உரு 35.00.

"வாழ்க்கை நெறிமுறைகளினின்றும் சிறிது வழுவிய ஒரு பெண்ணைப் பற்றி நாளிதழில் வெளிவந்த செய்தி சுவையானதாகவும் விழிப்புணர்வு பெற்ற ஒரு பெண்ணின் வரலாறாகவும் இருந்தமையால் அது புதினமாகப் புனையப் பட்டுள்ளது."

## தமிழ் உணர்ச்சி

ஆசிரியர்:
முனைவர்
க.பொ. இரத்தினம்

வெளியீடு:
தமிழ்மறைப் பதிப்பகம்,
எச்சு 12/9, பாரி தெரு,
சென்னை - 90;

விலை: உரு. 40.00.

"தமிழ் மக்கள் தமிழின் சிறப்பையும் தமிழரின் பழைமையையும் தமிழர் நாகரிகத்தின் உயர்வையும் தமிழ் மறையின் பெருமையையும் நன்கு அறிந்து தலை நிமிர்ந்து நற்றமிழராக வாழ்தற்கு ஊக்கம் நல்கும் இந்நூல்" இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

## தொடர்பன் கட்டுரைகள்

ஆசிரியர்:
மா.கு. சம்பந்தன்
(தொடர்பன்)

வெளியீடு:
தமிழர் பதிப்பகம்,
243 இலிங்கு தெரு,
சென்னை-1.

விலை : உரு. 36.00.

"வளருந் தமிழ், கலைச் சொல்லாக்கம் என்ற இரு கட்டுரைகள் எதிர்காலத் தமிழை மரபு வழுவாது வளர்க்கலாம் என்ற நெறிகளை வடிக்கின்றன. 'புதுமை என்பனவெல்லாம் பழைமையின் தொடர்ச்சியே' என்ற ஆசிரியரின் கருத்து அழகானது, அறிவானது, வன்மையானது".

"இந்நூலில் இருபத்தேழு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. வரலாறு, இலக்கியம் குமுகாயம்போன்றவை அணி வகுக்கின்றன. பன்னிருவர் வரலாறு நூலில் இடம் பெற்றிருந்தாலும் அனைவரும் தமிழ்த் தொடர்பினராகவே விளங்குகின்றனர். 'கண்ணகி மதுரையை எதிர்த்தது முறையா?' — இது இலக்கியக் கட்டுரை. பிறவெல்லாம் குமுகாயப் படிக் கட்டுகளின் மூலம் வெற்றிக் கோபுரத்தை எட்ட உதவுவன. (அனைத்தும் பல்வேறு இதழ்களில் வெளிவந்தவை)". ❒

படிப்பகம்

www.padippakam.com

# வேறென்ன சொல்வது?

*"பா.ச.க. அரசு செயலிழந்து விட்டது!"

த.மா.கா. பொதுக்குழுத் தீர்மானம்

➢ 'இதுவரை செயற்பட்டு வந்தது என்று ஒப்புக் கொண்டமைக்கு நன்றி' என்கிறார் பா.ச.க.காரர் ஒருவர்.

*"பாழ்பட்டு நிற்கும் மக்களை வாழ்விக்க வந்துள்ள பெருமான் (மகாத்துமா) மருத்துவர் இராமதாசு!"

— வாழப்பாடி இராமமூர்த்தி

➢ எந்த மக்கள்? செயலலிதா-சசிகலாவா, வாச்சுப்பேய், அத்துவானியா?

*"எட்டாம் வகுப்புக்கு மேல் தமிழ் ஆங்கிலம் அல்லாத வேறொரு மொழியைக் கற்பிக்கவும் ஏற்பாடு தேவை".

— பா.ச.க. இளைஞரணி மாநாட்டுத் தீர்மானம்.

➢ வேறொரு மொழி என்பானேன்; சமற்கிருதம் என்று வெளிப்படையாகச் சொல்ல என்ன வெட்கம்...?

* பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் இனித் தமிழக மக்களை ஈர்க்க முடியாது"

— மேனாள் நடுவரசு அமைச்சர் ப.சிதம்பரம்.

➢ நடிப்பாற்றலும் குண்டு வெடிப்புமே ஈர்க்கமுடியும் என்கிறாரா?

## இவர்.... அவர்!

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசியல்மணி (மணி–மணியம்மை) | — | ஈ.வே.இரா. மணியம்மையார் (காந்திமதி) |
| 2. | அருட்செல்வம் | — | கலைஞர் கருணாநிதி |
| 3. | அருளின்பக் கடலார் | — | திருமுருக. கிருபானந்தவாரியார் |
| 4. | அறச்செல்வி | — | மருத்துவர் தருமாம்பாள் |
| 5. | உயிரின்பன் | — | ப. சீவானந்தம் |
| 6. | உலகண்ணல் | — | முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் |
| 7. | காரழகனார் | — | பேராயத்தலைவர் கு. காமராசர் |
| 8. | குழற்கோமான் | — | பெரும்புலவர் மே.வீ. வேணுகோபால் |
| 9. | நிலவழகனார் | — | நாவலர் சோமசுந்தரபாரதியார் |
| 10. | மன்பதைக்கன்பன் | — | 'தார்பிடோ' ஏ.பி. சனார்த்தனம் |

படிப்பகம்

www.padippakam.com



# கும்பமும் குடமும்

❑ 'கும்பகோணம்' என்பதைக் 'குடந்தை' என்றும் 'கும்பாபிசேகம்' என்பதைக் 'குடமுழுக்கு' என்றும் தமிழில் சொல்கிறோம். ஆனால், தமிழ் மாதங்களில் ஒன்றின் பெயர் 'கும்பம்' என்றிருக்கக் காரணம் என்ன? 'கும்பம்' என்பது தமிழ்ச் சொல் என்றால், எவ்வாறு?

—இள. எல்லாளன், திண்டிவனம்

○ குடந்தை என்பதே கழக இலக்கியங்களும் குறிக்கும் பழந்தமிழ்ப் பெயர். அது குடமூக்கு எனவும் வழங்கப்பட்டுள்ளது; கல்வெட்டுகளிலும் இடம்பெற்றுள்ளது. குடமூக்கையே பிற்கால எத்தர்கள் கும்பகோணம் என வடமொழிப்படுத்தியுள்ளனர். ஆனால் அதிலுள்ள கும்பம் மட்டுமன்று; கோணமுங்கூட வடமொழியில் வழக்கூன்றிய தமிழ்ச் சொல்லே. முறையற்ற வழியில் வந்திருத்தலால் கும்பகோணம் கடைப்பிடிக்கத் தக்கதன்று.

[குடந்தை — குடமூக்கு என்பவற்றிலுள்ள குடத்தினைத் தொன்ம(புராண)ப் புனைவுபற்றிக் கலப் பெயராகக் கொள்வதை விடத் திசை(மேற்கு)ப் பெயராகக் கொள்வதே பொருத்தமாகத் தெரிகின்றது. அது தனிக் கட்டுரையாக விரியும்.]

'குடமுழுக்கு' என்பதே பின்னாளில் வடமொழிப் பித்தரால் 'கும்பாபிசேகம்' எனப் பெயர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. குடமுழுக்கிற்குக் கல்வெட்டுக ளில் 'நீர்த்தெளி' என்னும் பெயரும் உண்டு.

கும்முதல் (கும்) என்னுஞ் சொல் குவிதல் என்னும் பொருளது. கும் — குமி — குமிழ் — குமிழி என்பவற்றை நோக்குக.

கும் என்பது கும்பு என வளர்ந்தும், அது கூம்பு என நீண்டும் குவிதற் பொருளை உணர்த்துகின்றது. கும்புதல்—கூம்புதல்= குவிதல்.

கும்பு – கும்பிடு. கும்பிடுதல் = கைகுவித்தல்.

கும்பு என்பது கும்பம் என்றாகிக் குடம், தேர்முடி, யானைத் தலைக் குவவு, கட்டடக் குவி முகடு(dome) ஆகியவற்றைக் குறிக்கின்றது. ஆகவே, கும்பம் தமிழ்ச் சொல்லேயாதல் தெளியப்படும்.

குவிந்த சுரைக்காய் கும்பச்சுரை எனவும் கீழ்நோக்கிக் குவிந்த உண்கலம் கும்பா எனவும் வழங்கப் பெறுதல் காண்க.

இனி, 'கும்ப' என்னுஞ் சொல் இருக்கு வேதத்திலேயே இடம் பெற்றிருப்பினும் வடவர் அதற்குக் காட்டும் கும்ப் (b, bh) என்னும் மூலம் கும்பு என்னும் தமிழ்ச் சொல்லின் சிதைவே. இதற்கு வடவர் கூறும் பொருள் கவிதல் என்பதும், தென்னவர் கூறும் பொருள் குவிதல் என்பதுமாம். கவிதல் கீழ்நோக்கிய தென்றும் குவிதல் மேல்நோக்கிய தென்றும் வேறுபாடு காட்டி விளக்குகிறார் மொழிஞாயிறு பாவாணர்.

—இறை

www.padippakam.com

த.நா.செ. (ர) மா. 7211/பிபி செ.ப.(ஆர்.என்.) எண் : 8119/63 தென்மொழி

# நமக்கு வந்த மடல்கள்

**0 : 1655** பேரன்பின அப்பா அவர்களுக்கு, வணக்கம்!

ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு, 'ஐயா அவர்கள் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்' என்பதை உணர்த்திற்று.

எல்லோரும் திராவிடத்தில் மயங்கி நின்றுகொண்டிருந்த போதே தமிழ்த்தேசியத்தைத் தெளிவாகவும் உறுதியாகவும் சுட்டி முன்னேறிய தாலும், இனம் மொழி நாட்டுக் கொள்கையில் வாழ்வைக் கழித்ததாலும், அதற்காகப் பன்முறை சிறைசென்று துயருற்றதாலும், அடக்குமுறை தலைவிரித்தாடிய போதே

**இதோநான் ஒருவன் இங்கிருக் கின்றேன் எனைச் சிறை செய்யினுஞ் செய்க**

**ஈழத் தமிழரை ஆதரிக்கின்றேன் என்தலை கொய்யினுங் கொய்க!**

என்று பிளிறிய பேராண்மையாலும் (அக்கால் தமிழினத் தலைவரோ, தளபதியோ, புரட்சிப்புயலோ அடங்கியிருந்தார்கள்.) இந்திரா, இராசீவ் ஆகியோரைத் தமிழறம் பாடிச் சாவித்ததாலும், மக்கள் துணைமிக்க திரு. ம.கோ.இரா. மறைந்தபோது "தமிழகத்தின் இருண்ட சூழ்நிலை மறைந்தது" என்று துணிவுடன் எழுதிய ஆசிரியவுரையாலும்,

— இன்னவாறு பல செயற்கரிய செய்த பெரியாராக ஐயா அவர்கள் வாழ்ந்த காரணத்தால் இன்று 'உலகப் பெருந்தமிழன்' என்று தமிழ்ச் சான்றோரால் பாராட்டப்படுகிறார்கள்.— த. அன்பழகன், வேட்டரம்பட்டி

**.0 : 1656** அன்புநிறை தமிழ்நெஞ்சே, வணங்குகிறேன்!

என் இறுதிமூச்சு உள்ளவரை தென்மொழிக்குத் தொண்டு செய்வேன்.

தென்மொழி மீனம் இதழ் (சுவடி : 31, ஓலை : 3) அட்டைப் பாடல் மிகவும் சிறப்பாக உள்ளது. நம் பாவலரேறு ஐயாவின் பாடலாகவே நெஞ்சில் இனிக்கிறது. ஆனால் 'எட்டி நடப்போம் இனி' என்பதை 'எட்டி உதைப்போம் இனி' என்று ஐயாவாகவே எழுதியிருக்கலாம். மேலும் 'வேறென்ன சொல்வது?' பகுதி தென்மொழியின் மறுமலர்ச்சி! மகிழ்ச்சி!

— புலவர் மு. ஆறுமுகம், சாத்தனூர்.

**0 : 1657** அன்புடைய ஆசிரியருக்கு வணக்கம்!

தென்மொழி மீனம் இதழில் 'தமிழ்த் தேசிய இன அடையாளச் சிக்கல்' பற்றிய ஆய்வுக் கட்டுரை கண்டேன். வேகமாய் வளர்ந்த தீயை அணைத்த மகிழ்ச்சியில் நடுவணரசு செயல்படுகிறது. தீ அணையவில்லை. நீறுபூத்த நெருப்பாய்த் தமிழ் நெஞ்சங்கள் குமுறிக்கொண்டுதான் இருக்கின்றன. எரிமலையாய் வெடிக்கும் நாள் நெடுந்தொலைவில் இல்லை. 'பெயரிழந்த தமிழ் மக்கள்' எனும் கட்டுரை, தமிழ்ப் பெயர் சூட்டாத, சூடு சுரணையற்ற தமிழனுக்கு ஒரு பாடம்!

— ச. பாவண்ணன், செம்பட்டி.



படிப்பகம்